# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்


வார இதழ் – இலவசம் வெள்ளி, நவம்பர் 30, 2018. இதழ் - 41



மக்களைக் கொடுத்த மகராசிகளின் கதை இது...

தமது மக்களை அல்லது கணவனை போரில் இழந்து, பல வருடங்களின் பின்னரும் துயரில் துடிக்கும் பெண்களின் கதை இது.

அரங்கம் தயாரிப்பில் காணொளியாக www.arangamnews.com இல் பார்க்கலாம்.

**முன்றாவது குழந்தைக்கு Rs5000/=**

மட்டக்களப்பு மாநரசபை எல்லைப் பகுதியினுள் வாழ்கின்ற

பக்கம் - 09



**இலங்கை அரசியல் நிலவரம் -- சில காட்சிகள்**

தன்னுடைய உயிருக்கு அச்சுறுத்தல் என்று தெரிவித்திருக்கிறார் ....

பக்கம் - 03



**"Order Please...!" இலங்கையின் "கதாநாயகர்கள்"**

இன்றைய அரசியல் களத்தில் பாராளுமன்ற சபாநாயகர் பற்றி...

பக்கம் - 05



**உள்ளூர் உணவுக்கு வசதியிருக்க நஞ்சுணவை நாடுவதேன்?**

"உற்பத்திகள் இருக்கின்றன அவற்றினை சந்தைப்படுத்தும்

பக்கம் - 04




## மேலும் பெரும்பான்மை இழக்கும் மகிந்த தரப்பு – நிதிநெருக்கடியை எதிர்நோக்கவுள்ள மக்கள்

மகிந்த ராஜபக்ச தரப்புக்கு ஆதரவாக செயற்பட்டு வந்த ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர் சட்டத்தரணி விஜயதாச ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் எதிர்த்தரப்பில் அமரவுள்ளதாக அறிவித்துள்ளார். நேற்று வியாழக்கிழமை நண்பகல் நாடாளுமன்றம் கூடியதும் விசேட உரை நிகழ்த்திய விஜேதாச ராஜபக்ஷ மகிந்த தரப்பு காலத்தை இழுத்தடிக்காமல் பொரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் எனவும் அதனை சபாநாயகர் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் கூறினார்.

நாடாளுமன்றத்தில் எதிர்த்தரப்பில் அமர்ந்து சுயாதீனமாக செயற்படவுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

மகிந்த தரப்புக்கு மாறிச் சென்று கடந்த ஒக்ரோபர் மாதம், கல்வி உயர் கல்வி அமைச்சராகவும் பதவியேற்றிருந்த விஜயதாச ராஜபக்ஷ, திடீரென முடிவை மாற்றிக் கொண்டதற்கான காரணங்கள் எதனையும் வெளியிடவில்லை.

அதேவேளை நாடாளுமன்றத்தில் இதுவரை காலமும் சுயாதீனமாகச் செயற்பட்டு வந்த அத்துரலியே ரத்தன தேரர் மகிந்த ராஜபக்ஷ தரப்புக்கு ஆதரவு வழங்குவார் என எதிர்ப்பார்க்கப்பட்டபோதும் தேரர் தொடர்ந்தும் எதிர்த்தரப்பு ஆசனத்தில் இருந்து சுயாதீனமாகச் செயற்படவுள்ளதாக இன்று நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

இதனால் மகிந்த தரப்பு பெரும்பான்மையை நிரூப்பிப்பதில் மேலும் சிக்கலை எதிர்கொள்ளவுள்ளது. இன்னும் பல உறுப்பினர்கள் எதிர்த்தரப்புக்கு மாறி வருவார்கள்

தொடர்ச்சி... (பக்கம் -04 )

## மட்டு. மாவட்ட கால்நடை வளர்ப்பாளர்கள் 10 பேர் வனவளப்பிரிவினரால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிப்பு.



மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பிரதேசமான மயிலத்தமடு, மாதவனை பகுதிகளில் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டிருந்த கால் நடை வளரப்பாளர்கள் வனவளத் துறையினரால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் இப்பிரதேசத்தில் கால்நடை பராமரிப்பில் ஈடுபட்டிருந்த 10 பேரை அங்கு வந்த வனவளத்துறையினர் கைது செய்து பொலநறுவை மாவட்டத்தின் மகோயா வன பரிபாலனத்துறை அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

அம்பாறை மாவட்ட எல்லைக்குள் கால்நடை வளர்ப்பென்ற போர்வையில் காடழிப்பில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டி அவர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றனர். காலையில் கைது செய்யப்பட்ட அவர்கள் அன்றைய தினம் மாலை உறவினர்களால் பிணையில் அழைத்து வரப்பட்டுள்ளதாகவும் டிசம்பர் 6ஆம் திகதி வழக்கு விசாரணைகள் தெகியத்தகண்டி நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளதாகவும் மாதவணை, மயிலத்தமடு பிரதேச கால்நடை வளர்ப்பாளர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

கடந்த காலங்களில் இது போன்று இரண்டு தடவைகள் கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், 15 கால்நடை வளர்ப்பாளர்கள் குடிசை அமைத்திருந்தமை, அப்பிரதேசத்தில் வசித்தமை, கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் கடந்த 2015ஆம் ஆண்டு வனத்துறையினர் கைது செய்திருந்தனர் என்றும் அவர்கள் கூறுகின்றனர். இதன் வழக்கு விசாரணைகள் தற்போது நீதிமன்றத்தில் நடைபெற்று வருகின்றன. இவ்வாறான கைதுகள் தொடருகின்ற

தொடர்ச்சி... (பக்கம் -02 )


TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

ஊழலை ஒழிப்போம்!
அதற்கு எதிராக குரல்கொடுப்போம்
தமிழிலும் இலவச சட்ட ஆலோசனை பெற

நேர்மையின் புகலிடம்
இல: 5/1, எலிபேங்க் வீதி, கொழும்பு – 05
Email: help@tisrilanka.org Web: www.tisrilanka.org

அழையுங்கள் 011 2 501 503

மாத்தறை - 041 22 33 522 - வவுனியா - 024 222 76 76

## ‘மின்னல் அதிகம் தாக்கலாம்’



தற்போதைய காலநிலை அறிவுறுத்தலின்படி மின்னல்தாக்கம் அதிகமாக இடம்பெறக்கூடிய வாய்ப்புள்ளதனால் பொதுமக்கள் மிக அவதானத்துடன் செயற்படுமாறு சகல பிரதேச செயலாளர்களின் ஊடாகவும், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஊடாகவும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வுகள் செய்யப்பட்டு வருகின்றதுடன் பொதுமக்கள் விழிப்பாக செயற்படுமாறும் மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப்பணிப்பாளர் எம்.ஏ.சீ. எம்.றியாஸ் தெரிவித்தார்.

தற்போதைய காலநிலை தொடர்பாக ஊடகங்களுக்கு தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில்:-

‘வடகீழ் பருவகால பெயர்ச்சி காலநிலை மட்டக்களப்பு மாவட்டத்தில்

தொடர்ச்சி... (பக்கம் -07 )

## ‘ஹெலிக்கொப்டரில் பறக்க 840 மில்லியன் ரூபாய் செலவு’



கடந்த 21 நாட்களில் ஹெலிக்கொப்டர் பயணங்களுக்காக புதிய அரசாங்கம் 840 மில்லியன் ரூபாய்களை செலவு செய்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

அதிகரித்த செலவினங்களை கருத்தில் கொள்ளாது இவ்வாறு செலவு செய்யப்பட்டிருப்பதாக அவர் குற்றஞ்சாட்டினார்.

பிரதமர் அலுவலகத்துக்கான செலவுகளை தடை செய்யும் தீர்மானத்தை சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே அவர் இதனை குறிப்பிட்டார்.

மக்கள் சார்பில் இதனை பொறுத்துக்கொள்ள முடியாது என்றும், இப்படியான செலவுகளை தடுப்பதற்கான சட்ட ரீதியிலான அதிகாரம் தமக்கு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## லஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு சுமார் 3000 முறைப்பாடுகள்

இந்த வருடத்தில் 2956 முறைப்பாடுகள் தமக்கு கிடைத்துள்ளதாக இலஞ்சம் மற்றும் ஊழல் குறித்த ஆராயும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மொத்தமாக கிடைத்துள்ள முறைப்பாடுகளில் 1848 முறைப்பாடுகளை தாம் விசாரிக்கவுள்ளதாக ஆணைக்குழுவின் புலனாய்வு பிரிவு வட்டாரங்கள் கூறுகின்றன.

லஞ்சம் தொடர்பாக 411 முறைப்பாடுகளும்

தொடர்ச்சி...

## தேசிகர் வீதியின் அவலம் பாரீர்!



(காரைதீவு நிருபர் சகா)

காரைதீவின் மத்தியை ஊடறுத்துச் செல்லும் பிரதான நீண்டவீதியான தேசிகர் வீதி பல வருடகாலமாக புனரமைக்கப் படாமையினால் படுமோசமாக குண்டும் குழியுமாக காணப் படுகின்றது. மழைகாலத்தில் சிறுசிறு குளமாககட்சியளிக்கும். சிலஇடங்களில் பொதுமக்கள் செங்கல் துண்டுகளைப்போட்டுள்ளனர்.

போக்குவரத்திற்கு சற்றும் பொருத்த மில்லாதவகையில் காரைதீவில் ஒரு பிரதானவீதி காணப்படுகின்றதென்றால் அது தேசிகர் வீதியாகத்தானிருக்கும்.

இது காரைதீவின் 3 பிரிவுகளை ஊடறுத்துச் செல்லும் சுமார் 2கிலோமீற்றர் தூர வீதியாகும்.

இவ்வீதி புனரமைக்கப்படவேண்டும் என கடந்த பல வருடங்களாக பிரதேச அபிவிருத்திக்குழுக்கூட்டங்களில் பேசப்பட்டுவந்தும் இன்னும் அது கைகூடாமலிருப்பது கண்டு அவ்வீதியில்

தொடர்ச்சி... (பக்கம் -15 )

## எதிரணி ஊடக மாநாட்டின்போது மின்சாரம் இடைநிறுத்தம் பாராளுமன்றத்தைப்போல் கல்முனை மாநகரசபை அமர்வும் இழுபறியில்..




(காரைதீவு நிருபர் சகா)

கல்முனை மாநகர சபையின் மாதாந்த அமர்வு மீண்டும் அமளிதுமளியுடன் முடிவடைந்துள்ளது.

இந்த அமர்வு கடந்த புதன்கிழமை பிற்பகல் மாநகரசபை முதல்வர் ஏ.எம்.றக்கீப் தலைமையில் நடைபெற்றது.

இலங்கைப் பாராளுமன்றத்தின் அண்மைக்கால அமர்வுகளைப்போல் கல்முனை மாநகரசபை யின் கடந்த சில அமர்வுகள் தொடர்ந்து அமளிதுமளியுடன் குழப்பத்திலேயே முடிவடைந்துவருவது குறிப்பிடத்தக்கது.

புதனன்று பிற்பகல் அரைமணிநேரம் தாமதித்து 2.30 மணியளவில் ஆரம்பமான அமர்வு சுமார் ஒருமணிநேரம் சுமுகமாகப் நடைபெற்றுக்கொண்டிருந்தது.

பின்பு நிதிக்குழு தீர்மானம் தொடர்பில் ஏற்பட்ட வாக்குவாதத்தால் சபையில் அமளிதுமளி ஏற்பட்டது. குறித்த பிரேரணையை வாக்கெடுப்பிற்கு விடவேண்டும் என எதிரணியினர் வேண்டுகோள் விடுத்தனர். அது குறித்து மேயர் வாதத்திலீடுபட்டார்.

அதன்போது மேயர் றக்கீப் அந்த தீர்மானத்தை தான் இறுதிமுடிவு வாக்கெடுப்பிற்கு விடத்தேவையில்லை எனக்கூறி கூட்டத்தை இடைநடுவில் மாலை 5.30மணியளவில் முடித்துவிட்டு ஆசனத்தைவிட்டு வெளியேறினார்.

அதன்போது எதிரணியினர் ஆசனங்களை தூக்கி எறிந்து மேசையிலிருந்த காகிதங்களை வீசினர். சபை குழம்பியது.

ஆளுந்தரப்பினர் 11பேரும் வெளியேற

தொடர்ச்சி... (பக்கம் -15 )

## மட்டு. மாவட்ட கால்நடை வளர்ப்பாளர்கள் 10 பேர் வனவளப்பிரிவினரால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிப்பு.

நிலையில் தாம் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரைப்பிரதேசமான இப்பிரதேசங்களிலிருந்து கால்நடைகளை அழைத்துவர வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர். 1974ம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் மேய்ச்சல் தரையாக பயன்படுத்தி வரப்படும் பிரதேசமே மயிலத்தமடு, மாதவணைப் பிரதேசமாகும். யுத்த காலத்தில் இப்பிரதேசத்திற்குச் சென்று வருவதில் பிரச்சினை ஏற்பட்டிருந்தது. யுத்த நிறைவின் பின்னரான காலப்பகுதியில் இருந்து மீண்டும் இப்பிரதேசத்தில் கால்நடை வளர்ப்பு நடைபெற்று வருகிறது.

மயிலத்தமடு, மாதவணை பகுதியில் 2009களில் அத்துமீறிய விவசாய நடவடிக்கைகளில் பொலநறுவை, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் ஈடுபட்டனர்.

மிக நீண்ட பிரயத்தனங்களின் பின்னர் அப்பிரதேசங்களிலிருந்து கடந்த வருடத்தில் அவர்கள் வெளியேற்றப்பட்டிருந்தனர். இருப்பினும் சிலர் இவ்வாறான நடவடிக்கைகளில் தொடர்ந்து வருகின்ற நிலையில் வனவளப் பிரிவினர் இவ்வாறான கைதுகளிலும் குழப்பங்களிலும் ஈடுபட்டு வருவதாகவும் அறிய முடிகிறது.

கடந்த காலங்களில் மயிலத்தமடு, மாதவனை பகுதியில் ஆயிரத்துக்கு மேற்பட்ட மாடுகள் கொலை செய்யப்பட்டும், பிடிக்கப்பட்டு பணம் வசூலிக்கப்பட்டும், சித்திரவதைகளுக்கு உள்ளானமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## சத்துருக்கொண்டான், ஓசானம் நிலைய ஒளிவிழா

மட்டக்களப்பு பிராந்திய புனித வின்சன்ட் டி போல் சபையின் அனுசரணையுடன் செயற்பட்டுவரும், சத்துருக்கொண்டான் விசேட தேவைகளிலுள்ள சிறப்புக் குழந்தைகளுக்கான ஓசானம் நிலைய ஒளி விழா நிகழ்வானது 02.12.2018 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு ஓசானம் நிலையத்தில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை பொன்னையா ஜோசப் ஆண்டகை அவர்களும், கௌரவ விருந்தினராக சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளர் திரு.எஸ்.அருள்மொழி அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். சிறப்புக்குழந்தைகளின் திறமைகளை வெளிக்கொணரும் இந்நிகழ்வினைக் கண்டுகளிக்க நிலையத்தின் நிர்வாகி அருட்சகோதரி நிலானி அவர்களுடன் ஆசிரியர்கள், சிறார்கள் மற்றும் நிர்வாகக்குழுவினர் அன்புடன் அழைக்கின்றனர்.

-

ஜே.எச்.இரத்தினராஜா

# இலங்கை அரசியல் நிலைவரம் -- சில காட்சிகள்



தன்னுடைய உயிருக்கு அச்சுறுத்தல் என்று தெரிவித்திருக்கிறார் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ். இதைப் படிக்கும்போது உங்களுக்குச் சிரிப்பு வரலாம். ஏனென்றால் சுரேஸ் நிதானமாக – உண்மையாகத்தான் இதைச் சொல்கிறாரா என்று சந்தேகமாயிருக்கும். ஒரு மாதத்தில் நான்கு தடவைகள் கட்சி தாவலில் ஈடுபட்டால் இந்த மாதிரி நெருக்கடி வரத்தானே செய்யும். அதாவது மற்றவர்களை முட்டாளாக்குவது, சீண்டிப்பார்ப்பது, ஏமாற்றுவது என்றால் அதற்கான பரிசு எங்கிருந்தோ வரத்தானே செய்யும்.

அதேவேளை வடிவேல் சுரேஸுக்கு உண்மையாகவே கொலை அச்சுறுத்தல் என்றால், அச்சுறுத்தலில் ஈடுபடுகின்றவர்கள் கண்டிக்கப்பட வேண்டும். அவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படுவது அவசியம். அதற்கான பொறுப்பு தற்போது அதிகாரத்திலிருக்கும்(?) மகிந்த ராஜபக்ஸ – மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்துக்குரியது.

ஆனால், அதற்கிடையில் மறுபடியும் மகிந்த ராஜபக்ஸவின் மடியிலிருந்து கொண்டு கிரிபத் சாப்பிடுவதற்குச் சுரேஸ் சென்றால்(?) சட்டத்துறையினர்தான் என்ன செய்வது?

(02) தமது அரசாங்கம் தொடர்ந்தும் பாராளுமன்றத்தைப் புறக்கணிக்கும் என்று சொல்லியிருக்கிறார் விமல் வீரவன்ச (அமைச்சர்).

அப்படியென்றால், அரசாங்கம் பாராளுமன்றத்துக்கு வெளியே இயங்குகிறதா?

அப்படியென்றால் பாராளுமன்றத்துக்கு வெளியேதான் தொடர்ந்தும் அரசாங்கம் இயங்கப்போகிறதா?

அப்படியென்றால் இந்த அரசாங்கத்துக்குப் பாராளுமன்றமே தேவையில்லை என்றாகி விட்டதா?

அப்படியென்றால் இனி நாட்டுக்கே பாராளுமன்றம் தேவையில்லை என்றாகி விடுமா?

அப்படியென்றால் பாராளுமன்றத்துக்கும் அரசாங்கத்துக்குமிடையிலான தொடர்புகள் என்ன?

அப்படியென்றால் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட வேண்டிய விடயங்கள், எடுக்கப்பட வேண்டிய தீர்மானங்கள், நிறைவேற்றப்பட வேண்டிய பிரேரணைகள், ஆக்கப்பட வேண்டிய திட்டங்கள், அனுமதிக்கப்பட வேண்டிய உடன்படிக்கைகள் எல்லாவற்றினதும் நிலை என்ன?

அப்படியென்றால் இனி என்னதான் நடக்கப்போகுது?

அப்படியென்றால்....!????

(03) என்னதான் நடந்தாலும் பரவாயில்லை. ரணில் விக்கிரமசிங்கவைத் தன்னுடைய பதவிக்காலத்தில் பிரதமராக்க மாட்டேன் என்றிருக்கிறார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. (இதென்ன தனிப்பட்ட விவகாரமா? அல்லது அரசியல் விவகாரமா? என்று நீங்கள் கேட்கலாம். அதற்கான பதில் கீழே உண்டு).

එක්සත් ජාතික පක්ෂය
ஐக்கிய தேசியக் கட்சி
UNITED NATIONAL PARTY

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பை அடுத்து ஐ.தே.கவுக்குள் மீண்டும் உள்விவகாரம் புகையத் தொடங்கியுள்ளது. ரணிலுக்குப் பதிலாக வேறு ஒருவரை நாம் பிரேரிக்கலாம் என்று ஐ.தே. கவின் ஒரு அணியினர் பேசத் தொடங்கியிருக்கிறார்கள். இதற்காக அவர்கள் இரண்டு மூன்று பெயர்களைப் பிரேரித்தும் உள்ளனர். ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சிகளான முஸ்லிம் காங்கிரசும் இலங்கை மக்கள் காங்கிரசும் தமிழ் முற்போக்கு முன்னணியும் கூட இதையே வலியுறுத்துகின்றன.

ஆனால், ரணில் இதற்கு உடன்படவில்லை. என்னதான் நடந்தாலும் தானிருக்கும் வரையில் மறு தெரிவுக்கு இடமேயில்லை என்று பிடிவாதமாக மறுத்துள்ளார்.

கொடாக்கண்டரிடமும் விடாக் கண்டரிடமும் சிக்கியிருக்கிறது நாடு என்கிறார் மனோ கணேசன்.

## கருணாகரன்

இந்த நிலையில் வேறு என்ன வழியுண்டு என்று எல்லோரும் தலையைப் பிய்த்துக்கொண்டிருக்கிறார்கள். மிஞ்சியுள்ளது நீதிமன்றத்தீர்ப்பு மட்டும்தான். மகிந்த ராஜபக்ஸவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான தீர்ப்பும், பாராளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதியின் உத்தரவு மீதான தீர்ப்பும் வந்தால்தான் தெரியும் அடுத்தது என்ன என்று.

அதுவரையில் நாடு இப்படியே தள்ளம்பாடிக் கொண்டிருக்க வேண்டியதுதான்.

(04) கரு ஜயசூரியா சர்வாதிகாரமாக நடக்கிறார். பக்கச்சார்பாகச் செயற்படுகிறார் என்று குற்றம் சாட்டுகிறார்கள் புதிய அரசாங்கத்தினர். இதை ஏற்றுக்கொள்ளவே முடியாது என்றும் கூறுகிறார்கள். சபாநாயகரின் தன்னிச்சையான நடவடிக்கைகளை மறுப்பதற்காகவே தாம் பாராளுமன்றத்தைப் புறக்கணிப்பதாகவும் அவர்கள் சொல்கின்றனர்.

ஆகவே அவர்களுடைய அர்த்தத்தில் பாராளுமன்றம் கரு ஜயசூரியாவின் கட்டுப்பாட்டில் உள்ளது. பாராளுமன்றச் சர்வாதிகாரியாக கரு ஜயசூரியாக உள்ளார்.



மறுபக்கத்தில் ஜனாதிபதி சட்டவரன்முறைகளை மீறிச் செயற்படுகிறார். சர்வாதிகாரமாக நடக்கிறார் என்று குற்றம் சுமத்துகின்றனர் ஐக்கிய தேசிய முன்னணியினரும் அவர்களுக்கு ஆதரவளிப்போரும்.

பெரும்பான்மையை நிரூபித்த பிறகும் அதை ஏற்றுக்கொள்ளாமல் பிடிவாதமாகவே தான் நியமித்த அமைச்சரவையையும் பிரதமரையும் இயங்க விட்டிருக்கிறார். இது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. இதனாலேயே தாம் ஜனாதிபதியின் அறிவிப்புகளை மறுதலிக்க வேண்டியிருக்கிறது என்கின்றனர் இவர்கள். இவர்களுடைய அர்த்தத்தில் ஜனாதிபதி மக்கள் ஆணைக்கும் ஜனநாயக மரபுக்கும் (அடிப்படைகளுக்கும்) மாறாகச் செயற்படுவதாக கருதப்படுகிறது. ஆகவே இது ஜனாதிபதி சர்வாதிகாரம். இதை எப்படி ஏற்றுக் கொள்வது என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இப்படியே போனால் என்னதான் நிலைமை? என்று தெரியாமல் தடுமாறுகின்றனர் சனங்கள்.

(05) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாரையும் ஆதரிக்கவில்லை. ஆனால் ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நமக்குள்ளது. யார் ஜனநாயகத்தைப் பாதுகாக்க விரும்புகிறார்களோ, அவர்களை நாங்கள் ஆதரிப்போம் என்று தெரிவித்துள்ளார் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன்.

சட்டவரன்முறைகளின் அடிப் படைகளிலேயே தான் ஒவ்வொரு நடவடிக்கையையும் செய்து வருகிறேன். அரசியல் சாசனத்தை மீறவில்லை என்று ஐ.நா.செயலருக்கு அனுப்பிய சேதியில் தான் சுட்டிக்காட்டியதைப் பார்க்குமாறு சம்பந்தனிடம் கேட்டிருக்கிறார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

ஆகவே தனக்கு வழங்கப்பட்ட மக்கள் ஆணைக்கு ஏற்ற விதத்தில் நாட்டின் நன்மை கருதி, தன்னால் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் அவை ஜனநாயக அடிப்படையில் (அரசியல் சாசனத்தின்படி) உள்ளன எனவும் நிறுவ முற்படுகிறார் ஜனாதிபதி.

அரசியல் நாகரிகத்தையும் பாராளுமன்ற நியதிகளையும் மீறித் தவறாக நடப்பவர் எப்படி ஜனநாயக மரபை ஏற்றுக்கொள்வதாகச் சொல்ல முடியும். மக்கள் ஆணையைப் பெற்ற பெரும்பான்மைப் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு தமக்கே இருப்பதால் தாமே ஜனநாயக அடிப்படையில் பலமானவர். உரித்துள்ளவர். இதை ஏற்றுக்கொள்வதே ஜனநாயகமாகும் என்று சொல்கிறார் ரணில்.

தனக்கு நீதி கிட்டும்வரையில் அலரி மாளிகையை விட்டு



வெளியேறப்போவதில்லை எனவும் அவர் சொல்லியிருக்கிறார். ஜனநாயகத்துக்கான அடையாளமாகவே தன்னுடைய இன்றைய அலரிமாளிகை வாசம் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

அப்படியென்றால் எந்தப் பக்கம் ஜனநாயகம்? எந்தப் பக்கம் நியாயம்? எந்தப் பக்கம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு?

# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்
மற்றும் வாழ்நாள் நன்கொடையாளர் சக்தி இல்லம்.

## உள்ளூர் உணவுக்கு வசதியிருக்க நஞ்சுணவை நாடுவதேன்?

“உற்பத்திகள் இருக்கின்றன அவற்றினை சந்தைப்படுத்தும் திறனில்தான் பின்நிற்கின்றோம்” என மாரிமுத்து கண்ணகையைப் பார்த்துக் கூறினார். கொக்கட்டிச்சோலை கலாசார மண்டபத்தின் முன்நின்று இருவரும் நீண்ட நேரமாக பேசிக்கொண்டிருந்தனர். ‘வாழ்க்கைச் சுமை அதிகரித்திருக்கின்ற காலச்சூழலில், அவற்றிற்கு ஈடுகொடுப்பதற்கு சுயதொழில்களிலும் ஈடுபடவேண்டியுள்ளது’ என ஆரம்பித்த மாரிமுத்து, அண்மையில்



கொக்கட்டிச்சோலை கலாசார மண்டபத்தில் நடைபெற்ற போசாக்கு கண்காட்சி தொடர்பிலும் கூற ஆரம்பித்தாள்.

மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகமும், வேள்ட்விஸன் நிறுவனமும் இணைந்து போசாக்கு உணவுக்கண்காட்சியொன்றினை ஏற்பாடு செய்து அண்மையில் நடாத்தியிருந்தனர். இக்கண்காட்சியிலே 150க்கு மேற்பட்ட உணவுப்பண்டங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இவையனைத்துமே உள்ளூரிலே விளைந்த தானியங்களையும், இலைவகைகளையும் கொண்டு உருவாக்கப்பட்ட உணவுபண்டங்களாகவே இருந்தன.

ஒவ்வொரு நாளும் ஒரே வகையான உணவுப் பண்டங்களை உண்டு சலிப்படைந்திருக்கின்ற நம்மக்கள் மத்தியில், 150உணவுப் பண்டங்களை காண்பதென்பதும், அவற்றினை சுவைத்துப்பார்ப்பதென்பதும் இலகுவில் முடியாத காரியமாகும். ஆனாலும் வருடத்தில் அரை வருடத்திற்கு மேலாக ஒவ்வொரு புதிய உணவுப்பண்டங்களை உண்பதற்கான உணவு வகைகள் எமத்தியிலே இருக்கின்றன. அவ்வாறான உணவுகளை உண்பதன் மூலமாக உடலுக்கு தேவையான சத்துக்களை பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் அவற்றினைச் செய்து உண்ணாது, நஞ்சு உணவுகளை தேடிப்பெற்றுக்கொண்டு உண்ணுவதும், காய்ந்த உணவுகளை உண்பதனையும் தினம் செய்துகொண்டிருக்கின்ற சூழலில் நஞ்சற்ற உணவுகளையும், உடன்பெற்ற உணவுகளையும் உண்பதற்கு வாய்ப்பிருக்கின்ற போதும் அவற்றினை பயன்படுத்தாமல்விடுகின்ற நிலையே நடந்தேறி வருகின்றது.

கண்காட்சிக்காக வைக்கப்பட்டிருந்த உணவுகளை மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட அன்னையர் குழுவினரே செய்திருந்தனர். இதில் குறிப்பாக 50க்கு மேற்பட்டவர்கள் பங்கெடுத்திருந்தனர். போசாக்கு குறைவான பிள்ளைகளின் போசாக்கினை அதிகரிக்க கூடிய வகையில், உணவுப்பண்டங்களின் சேர்க்கைகளும் அமைந்திருந்தன. அதேவேளை இவ்வாறான உணவுகளை பிள்ளைகளுக்கு வழங்கவேண்டுமென்ற விழிப்புணர்வுகளும் கிராமங்கள்தோறும் நடத்தப்பட்டுள்ளன. இதில் போசாக்கு குறைவான பிள்ளைகளின் பெற்றோர்கள் உள்வாங்கப்பட்டிருக்கின்றனர். பிள்ளைகளுக்கும் அவ்விடத்திலே செய்த உணவுகள் கொடுக்கப்பட்டு பிள்ளைகளின் போசாக்கு அளவிடப்பட்டுள்ளது. இதன்மூலம் போசாக்கு அதிகரித்தமையை சில நாட்களில் நேரடியாக உணர்த்திருக்கின்றனர். இதனால்தான் அனைவரும் ஒவ்வொரு நாட்களும் பிள்ளைகளுக்கு போசாக்கான உணவினை வழங்க வேண்டும் என்ற வகையில், இக்கண்காட்சியையும் ஏற்பாடுசெய்திருந்தனர். எனக்கூறிய கண்ணகை, இவ்வுணவு வகைகளை ஒவ்வொரு நாளும் பெற்றோர் செய்து கொடுப்பர் என்பதனையும் முற்றுமுழுதாக சொல்லமுடியாது என்றாள்.

தாம் செய்வதனை விட பிறர் செய்து வைத்துள்ளதை பெற்று உண்ணக்கூடியவர்களாக பலர் இருக்கின்ற நிலையில், இவ்வாறான 150க்கு மேற்பட்ட உணவுபண்டங்களையும் ஒரே இடத்தில் வைத்து விற்பனை செய்யக்கூடிய நிலையொன்றினை இப்பகுதியில் ஏற்படுத்தினால், உணவுபண்டங்களை செய்து உண்ணுவதற்கு நேரமில்லாதவர்கள் கொள்வனவு செய்து உண்பதற்கு வாய்ப்புள்ளது. இதற்கு மேலாக தொழில்வாய்ப்புக்களும் அதிகம் கிடைக்கப்பெறும். இன்றைய சந்தைகளில் உள்ளூர் உற்பத்திகளுக்கும் அதிக இடமுண்டு. இவ்வாறான சூழ்நிலையில், உள்ளூர் பண்டங்களை செய்வதன் மூலமாக, பிறநாட்டவர்களின் கவனத்தினை ஈர்க்கக்கூடிய நிலையினை ஏற்படுத்தலாம். அதேவேளை உள்ளூர் உற்பத்திகள் மங்கிவிடாது.

எம்மிடத்திலே பல தொழில்கள் இருக்கின்றன. அவ்வாறான தொழில்களைப் பற்றி கூறுகின்றோமே

**படுவான் பாலகன்**

தவிர அவற்றினை செய்து, வருமானத்தினை ஈட்டக்கூடிய வகையில், சந்தைப்படுத்தலை மேற்கொள்வதில்லை. இதனால்தான் கடையை திறந்து சில நாட்களில் மூடுகின்ற நிலையில் இன்றுவரை இருந்து கொண்டிருக்கின்றோம். உள்ளூர் உணவுப்பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய திறமை இருக்கின்ற போதிலும் அவற்றினை சந்தைப்படுத்துவதற்கான வசதியினை யார் ஏற்படுத்தி தருவார் என்பதனையே சிந்திக்கின்றோம். நாமே சந்தைப்படுத்தலை சிந்திப்பதில்லை. தொழில்களை இனங்காட்டுகின்ற போது, உற்பத்தி சந்தைப்படுத்தலையும் இனங்காட்ட வேண்டிய தேவை இன்றைவரை இருப்பதென்பதும் கவலையானதொன்றே.

‘படுவான்கரைப்பகுதியே பண்பாடுகளை காத்துவருகின்ற மண்ணாக இருக்கின்றது. இம்மண்ணில் விளைந்த உணவுகளையும், தொடர்ந்தும் வைத்துக்கொள்வதற்கும், பிள்ளைகளுக்கு அவற்றினை வழங்குவதற்குமான நடவடிக்கைகளை



எடுப்பதற்கு, குறைந்த செலவில் நம்வீட்டு உணவினை உட்கொள்வதற்கு, பல பெண்களுக்கான வேலைவாய்ப்பினை வழங்கக்கூடிய வகையில் விரைவில் உற்பத்தி நிலைமொன்றை உருவாக்க வேண்டும்’ எனக் கூறிய கண்ணகை அவ்விடத்தினைவிட்டு அகன்றாள்.

தொடர்ச்சி...

## மேலும் பெரும்பான்மை இழக்கும் மகிந்த தரப்பு – நிதிநெருக்கடியை எதிர்நோக்கவுள்ள மக்கள்

என ஐக்கியதேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர் ரவி கருணாநாயக்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் செயலாளருக்கு இலங்கை அரச நிதியை செலவு செய்யும் அதிகாரத்தை நிறுத்துவதற்கான பிரேரணை 123 வாக்குகளினால் இன்று வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் நிறைவேறியுள்ளது. ரவி கருணாநாயக்க இந்தப் பிரேரணையை இன்று சமர்ப்பித்தார்.

ஆனால் நாடாளுமன்ற அமர்வை மகிந்த ராஜபக்ஷ தரப்பு புறக்கணித்துள்ளது. சபாநாயகர் நாடாளுமன்றத்தை நிலையியல் கட்டளைச் சட்டங்களுக்கு அமைவாகக் கூட்டும் வரை சபை நடவடிக்கைகளை புறக்கணிக்கவுள்ளதாக மகிந்த தரப்பு சபை முதல்வர் அமைச்சர் தினேஸ் குணவர்த்தன கூறியுள்ளார்.

ஆனால் பெரும்பான்மைப் பலம் இல்லாததால் மகிந்த தரப்பு நாடாளுமன்ற அமர்வை புறக்கணிப்பதாகவும் இது மகிந்த தரப்புக்கு பெரும் அவமானம் எனவும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

பிரேரணை நிறைவேற்றப்பட்டதும் நாடாளுமன்றத்தை நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 வரை சபாநாயகர் ஒத்திவைத்தார்.

இதேவேளை, எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் பாரிய நிதி நெருக்கடி ஒன்றை மக்கள் சந்திக்கவுள்ளதாக ஹர்ஷ டி சில்வா எச்சரிக்கை விடுத்துள்ளார். அரசாங்கம் செயலிழந்தமையாலும் நாடாளுமன்ற அமர்வுகள் உரிய முறையில் இடம்பெறாமையினால் நிதிச் சட்டமூலங்கள், நிர்வாக விடயங்கள் முடங்கியுள்ளன என்றும் அரச உயர் அதிகாரிகள் எதுவும் செய்ய முடியாத நிலையில் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, நிதி நெருக்கடியைச் சமாளிக்கவும் அரச ஊழியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் மற்றும் சலுகைகள் உள்ளிட்ட அரச நிர்வாகக் கட்டமைப்புகள் உரிய முறையில் செயற்படுவதற்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது அதிகாரத்தை பயன்படுத்தவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தகவல்கள் கூறுகின்றன.





# பட்டறிவு

# "Order Please…!" இலங்கையின் "கதாநாயகர்கள்"

இன்றைய அரசியல் களத்தில் பாராளுமன்ற சபாநாயகர் பற்றி நிறையவே உரையாடப்பட்டுவருகிறது. குறிப்பாக தற்போதைய சபாநாயகர் கரு ஜயசூரிய மீது ஆளும் மகிந்த தரப்பு 'அவர் பக்கச்சார்பானவர்' என்று பிரச்சாரம் செய்து வருவதுடன் அவரை தனிப்பட தாக்கிவருகிறார்கள். இலங்கையின் வரலாற்றில் சபாநாயகர் ஒருவர் இந்தளவு பேசுபொருளான சந்தர்ப்பம் இதற்கு முன்னர் இருந்திருக்க வாய்ப்பில்லை.

சபையை நடத்தவிடாதபடி சபாநாயகரின் ஆசனத்தை ஆக்கிரமித்து, சேதப்படுத்தி, அங்கிருந்த அவரது ஆவணங்களையும், உபகரணங்களையும் சேதப்படுத்தி, அவரை சபைக்குள் வரவிடாதபடி தடுத்தனர். அதையும் மீறி அவர் தனது கடமையை செய்ய, பொலிஸ் பாதுகாப்பு சூழ தாக்குதல்களில் இருந்து பாதுகாத்தபடி வந்து வேறொரு ஆசனத்தில் இருந்தபடி சபையை நடத்துமளவுக்கு சம்பவங்கள் அரங்கேறின. இலங்கை ஆசியாவிலேயே மூத்த பாராளுமன்ற மரபைக் கொண்ட நாடு. ஆசியாவில் பல நாடுகள் வாக்குரிமை பெற்றிராத காலத்தில் இலங்கை 1931இலேயே ஆணுக்கும் பெண்ணுக்குமான சர்வஜன வாக்குரிமையைப் பெற்று வெகுஜன தேர்தல் முறைக்கு முன்னோடியாக ஆன மூத்த நாடு.

அந்த எடுத்துக்காட்டுக்கு உலக அளவில் மரியாதை உள்ள நாடும் கூட. அப்பேர்பட்ட பாராளுமன்ற சம்பிரதாயத்துக்கு இழுக்கை ஏற்படுத்தும் செயல்கள் ஆங்காங்கு நமது வரலாற்றில் நிகழத்தான் செய்திருக்கின்றன. ஆனால் உலகே பரிகசிக்கும் வகையிலான உச்சமான சம்பவங்கள்தான் இந்த மாதம் அரங்கேறின. சபாநாயகர் கரு ஜயசூரியவை பாராளுமன்றத்துக்கு வெளியில் மாத்திரமன்றி சபைக்குள்ளேயே மோசமான அவதூற்றுச் சொல்களால் தாக்குவதை வீடியோ பதிவுகள் உறுதிசெய்துள்ளன. சபாநாயகர் என்பது சபையை நடத்தும் தலைவர் மாத்திரமல்ல. அப்பதவி நாட்டின் ஒரு உயர் கௌரவத்துக்கு உரிய பதவி.

## மொலமூரே முதல்

இலங்கையின் முதலாவது பாராளுமன்றத் தேர்தல் 1947ஆம் ஆண்டு நடத்தப்பட்டு அதன் பிரகாரம் உருவான பாராளுமன்றத்தின் முதலாவது சபாநாயகர் சேர் பிரான்சிஸ் மொலமூரே.

தமிழில் சபாநாயகர் என்று அழைக்கப்படுவதை சிங்களத்தில் "கதாநாயக" என்றே அழைப்பார்கள். ஒரு வகையில் இப்பதவியை "பாராளுமன்றத்தின் கதாநாயகர்" என்று சொன்னால் அது மிகையில்லைதான்.

சேர் அலெக்சாண்டர் பிரான்சிஸ் மொலமூரே பிரித்தானிய இலங்கையில் இலங்கை சட்டவாக்கப் பேரவை, இலங்கை அரசாங்க சபை ஆகியவற்றில் உறுப்பினராக இருந்தவர். டொனமூர் திட்டத்தின் கீழ் உருவான அரசாங்க சபைத்தேர்தலில் தெடிகம தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்று அவையின் முதல்வராக தெரிவானவர். சுதந்திரம் அடைந்ததன் பின்னர் உருவான பிரதிநிதிகள் சபையில் சபாநாயகராக தெரிவானார். அரசாங்க சபையின் முதலாவது சபாநாயகராகராக தெரிவானபோதும் பதவிக்காலம் முடியுமுன் அவர் 1951இல் இறந்துபோனார்.

டொனமூர் காலத்தில் பெண்களின் வாக்குரிமைக்காக குரல் கொடுத்த சொற்பத் தலைவர்களில் இவரும் ஒருவர். அவரது மனைவி அடலின் மீதெனிய மொலமூரே தனது தந்தையாரின் மரணத்தைத் தொடர்ந்து ருவன்வெல்ல தொகுதியில் நடந்த இடைத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இலங்கை அரசாங்க சபையின் முதலாவது பெண் உறுப்பினர்.

இரண்டாவது உலக யுத்தம் காரணமாக பல வருடங்கள் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டன. அதன் பின்னர் 1947இல் தான் மறு தேர்தல் நடத்தப்பட்டு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலான டீ.எஸ்.சேனநாயக்கவை பிரதமராகக் கொண்ட அரசாங்கம் அமைக்கப்பட்டது.

1947இல் பாராளுமன்றம் கூடியபோது எதிர்க்கட்சி தரப்பில் அன்றைய குருநாகல் மாவட்ட உறுப்பினர் ஸ்ரீ நிஷ்ஷங்க மொலமூரேவுக்கு எதிராக சபாநாயகர் ஆசனத்துக்கு போட்டியிட்டார். இறுதியில் மொலமூரே அதிக வாக்குகளுடன் தெரிவானார்.

மொலமூரே காலத்தில் சபையில் நிகழ்ந்த பல சுவாசியமான சம்பவங்கள் உள்ளன.

ஒருமுறை தண்டகமுவே தொகுதி உறிப்பினர் I.M.R.A.ஈரியகொல்ல பாராளுமன்றத்தில் தனது பேச்சின் போது எதிர்த் தரப்பிலிருந்த அரசாங்க உறுப்பினர்களைப் பார்த்து "எனக்கு இந்த சேனாக்களும், புக்குசாக்களும், தேவிந்தலாக்களின் மீதும் நம்பிக்கை கிடையாது" என்று கூறிவிட்டார். ஈரியகொல்ல சபையில் தூசனம் பேசிவிட்டார் என்று கூறி சபாநாயகர் மொலமூரே அவரை சபையை விட்டு வெளியேற்றும் அறிவித்தலைச் செய்தார்.

ஈரியகொல்ல உடனடியாகச் ஓடிச்சென்று அங்கிருந்த பாராளுமன்ற மொழிபெயர்ப்பாளர்களின் பொறுப்பாளரை சந்தித்து தனது வசனத்தை விளங்கப்படுத்தி சபாநாயகருக்கு அதனை விளங்கப்படுத்தும்படி வேண்டினார்.

அவர் சபாநாயகருக்கு விளக்கத்தை அளித்தார். சிங்கள இலக்கியங்களில் வந்த ஒரு அரச அவையில் இருந்த புலவர்களின் பெயர்களே அவை என்றும் அது அவதூறுக்குரிய சொல் அல்ல என்றும் விளக்கினார்.

தான் தெரியாமல் செய்த தவறுக்கு வருந்துவதாகக் கூறி ஈரியகொல்லவிடம் மன்னிப்பு கோரினார் மொலமூரே. அதன் பின்னர் தனக்கு தெரியாத சொற்களை மொழிபெயர்ப்புப் பிரிவினரிடம் கேட்டு விளக்கம் பெறும் வழிமுறையை அவர் கைக்கொண்டார். தனது மொழி ஆளுமையை வளர்த்துக்கொள்ள அவர் பல இலக்கியப் புலவர்களுடன் நெருங்கிய தொடர்பையும் நட்பையும் பேணி வந்தார். இலக்கியவாதிகளை அழைத்து விருந்துகொடுத்து மகிழ்ந்தார்.

ஒரு முறை பாராளுமன்றத்தில் சபையை நடத்திக்கொண்டிருக்கும் போதே அவருக்கு ஏற்பட்ட நெஞ்சடைப்பினால் அவசரமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அவர் இரண்டாவது நாள் காலமானார்.

மொலமூரேவுக்குப் பின்னர் அந்த சபாநாயகர் பதவியில் இருந்தவர்கள்

- எல்பர்ட் எப்.பீரிஸ்
- ஹமீட் ஹுசைன் ஷேக்
- டிகிரி பண்டார சுபசிங்க
- ஆர்.எஸ்.பெல்பொல
- ஸ்டான்லி திலகரத்ன
- ஹியு பெர்னாண்டோ
- ஷேர்லி கொறயா
- ஆனந்த திஸ்ஸ டீ அல்விஸ்
- பாக்கீர் மாக்கார்
- ஈ.எல்.சேனநாயக்க
- எம்.எச்.மொஹமட்
- கிரி பண்டார ரத்னாயக்க
- அனுரா பண்டாரநாயக்க
- ஜோசப் மைக்கல் பெரேரா
- வி.ஜே.மு.லொக்குபண்டார
- சமல் ராஜபக்ஷ
- கரு ஜயசூரிய

இருபது வருடகாலமாக இலங்கையின் முக்கிய அமைச்சுப் பதவிகள் இரண்டை வகித்த சீ.டபிள்யு.டபிள்யு.கன்னங்கர (இலங்கையின் சுதந்திரக் கல்வியின் தந்தை) தனது இறுதிக்காலத்தில் வறுமையில் காலம் தள்ளினார். இறுதியில் இயலாத நிலையில் அவர் அன்றைய சபாநாயகர் பெல்போலவிடம் "நான்

என்.சரவணன்

எனது இறுதிக் காலத்தில் இருக்கிறேன். மிகவும் நலிந்த நிலையில் இருக்கிறேன். எஞ்சிய காலத்தைக் கழிக்க எனக்கு பிச்சை சம்பளமாவது போடுங்கள்" என்று எழுதினார். அப்போது அவரின் சிஷ்யனான சேர் ஒலிவர் குணதிலக்க ஆளுநராக இருந்த காலம். ஏதோ காரணங்களால் கன்னங்கரா ஓரங்கட்டப்பட்டு பழிவாங்கப்பட்டிருந்ததாக சில சிங்களக் கட்டுரைகளில் கூறப்படுகிறது.

பாக்கீர் மாக்கார் சபாநாயகராக பதவி வகித்த போது "எனது ஒரு கையில் அல் – குர் ஆன் இருக்கிறது. மறு கையில் தம்மபதம் இருக்கிறது. அவற்றின்படியே நான் ஒழுகுவேன்" என்றார். 1983 கலவரத்தைத் தொடர்ந்து அதே யூலையில் நிகழ்ந்த பாராளுமன்றக் கூட்டத்தில் அக்கலவரத்தின் சூத்திரதாரிகளில்

தொடர்ச்சி... (பக்கம் -15 )


# யாருக்காக வாழ்ந்தான் என்னுயிர்த் தோழன்

நம்முடைய வாழ்நாளில் சில மனிதர்களை நம்மால் மறக்கவே முடியாது. நம் அடிமனதில் பதிந்த அவரது வாழ்வே அதற்குக் காரணம். அப்படிப் பார்க்கும் இடத்தில் என் இளம் வயதில், உழைக்கும் வர்க்கத்தின் நாயகன் காள்மாக்ஸ் அவர்களின் கொள்கையை என் மனதில் பதித்து, என் உள்ளத்தில் நீங்காத இடத்தினை பிடித்த, தோழர் கிருஸ்ணக்குட்டி அவர்களை என்னால் மாத்திரமல்ல அக்காலகட்டத்தில் வாழ்ந்த தொழிலாளர்கள், கூலி விவசாயிகள் கூட மறந்து விட முடியாது. மக்களுக்காகவே நாங்கள் வாழ்கின்றோம், சேவை செய்கின்றோம் எனக் கூறிவரும் இன்றைய முதலாளித்துவ அரசியல் தலைவர்கள் அனைவரும் தங்கள் பைகளுக்குள் பணம் சேர்ப்பதை குறிக்கோளாக கொண்டிருக்கின்றார்களே தவிர போலியான பசப்பு வார்த்தைகளால் மக்களை இனமத மொழிவாதியாக, பிரித்து தங்கள் இலாபத்தினை தேடிக் கொள்கின்றார்களே தவிர, தொழிலாள மக்களை பற்றியோ விவசாய மக்களைப் பற்றியோ அவர்களுக்கு எந்தவிதமான கவலையும் இல்லை.

தோழர் கிருஸ்ணக்குட்டியின் வாழ்நாளில் அவரது கடைசி உயிர்மூச்சு உள்ளவரை அவர்களுடன் இருந்தது வறுமை ஒன்றுதான். வறுமையில் இருந்த பொழுதுகூட தனது வறுமையைப் பற்றி அவர் சிந்திக்கவேயில்லை.

இதற்கு உதாரணம், தோழர். மு. ஏ. கிருஸ்ணக்குட்டிக்கு இரவு வேலைகளில் சில சமயங்களில் அவர் தனது காரியாலயத்திற்குச் செல்லும்முன் எனது வீட்டிலிருந்து நான் 5 இடியப்பங்களை கறியுடன் கொடுப்பது வழக்கம். ஒரு நாள் அவர் தனது இரவு உணவை எடுக்க வரவில்லை. நான் காலையில் சென்று ஏன் எடுக்க வரவில்லை என்று அவரிடம் வினாவிய பொழுது அவர் கூறினார் 'கிடைத்தால் சாயா வெல்லம் (வெறும் தேநீர்); கிடைக்காவிட்டால் கிணற்று வெல்லம்' என்று தனது மலையாள மொழியிலேயே எடுத்துரைத்தார். இச்சம்பவம் காள்மாக்ஸ்சின் "இலக்கிய ஆளுமையிலேயே இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழும் இலக்கணத்தை உடையவனே தொழிலாளி" என்ற மூலப்பொருளின் இலக்கணத்தைக் கண்டேன்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மனித மலத்தை மனிதனே எடுக்கும் கொடூரத்தைக் கண்டு, பொங்கியெழுந்த தலைவன் மலம் எடுக்கும் தொழிலாளர்களை வேலைநிறுத்தம் செய்யும்படி தூண்டினார். இச் சமயத்திலேயே மாநகரசபை



ந.சுந்தரேசன்.

ஆணையாளர் பொதுமக்களின் சேவைக்கு இடையூறு விளைவித்தமை எனக் கூறி தோழர் கிருஸ்ணக்குட்டியினை கைதுசெய்தார்கள். அச்சமயத்தில் நான் சிவானந்தா வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையாற்றிய தோழர் டாக்டர் இராமகிருஸ்ணன் அவர்களிடம் முறையிட்டேன். அவர் இதனை தோழர் பீட்டர் ஹெனமனுக்கு எடுத்துரைக்க, அவர் மட்டக்களப்பு பொலிஸ் அதிகாரிக்கு, தோழர் கிருஸ்ணாக்குட்டியின் உரிமை, தொழிலாள மக்களின் வர்க்கத்திற்காக குரல் எழுப்புவது. அதனை தடைசெய்ய யாருக்கும் உரிமையில்லை என எடுத்துரைத்ததின் பின்னர் தோழர் கிருஸ்ணக்குட்டி அவர்களை பொலிஸ் அதிகாரி விடுதலை செய்தார்.

அப்பொழுது ஏகாதிபத்தியம் ஏவி விட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி 'குட்டி உன் தலைக்கறுப்பை இந்த வீதியிலேயே காணக்கூடாது' என்றார். அச்சமயம் தோழர் கிருஸ்ணக்குட்டி 'நான் தந்திக்கம்பத்திலேயே நடந்து வந்தாயினும் தொழிலாள மக்களுக்காக குரல் கொடுப்பேன்' என்றார்.

இப்போராட்டத்தின் பின்னரே மனித மலத்தினை மனிதரே எடுக்கும் நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நிலையாக சகல வீடுகளுக்கும் மலசல கூடத்திற்கு அருகிலேயே குழியினை உருவாக்கி, அதற்குள்ளே மலத்தினை இடும் திட்டத்தினை உருவாக்கினது அரசு. இதற்கு மூல காரணி தோழர் கிருஸ்ணக்குட்டி ஆவார்.

பாட்டாளிகளுக்கு தங்களின் குரலை எழுப்புவதற்கு ஒரு மைதானம் வேண்டும் என்று கூற உருவாக்கப்பட்டதே பாட்டாளிபுர மைதானம் (இன்றைய மட்டக்களப்பு மத்திய பஸ் நிலையம்). தன் வாழ்வினை தொழிலாளர் மற்றும் கூலி விவசாய மக்களுக்கு வாழ்வதையே இன்பமாக கண்டாரே தவிர தனக்கான ஓர் குடும்பத்தையோ பிள்ளைகளையோ அவர் உருவாக்கவில்லை.

இன்றைய தேயிலைத்தோட்ட தொழிலாளர்கள் தங்கள் உழைப்பின் ஊதியத்திற்காக போராடும் வேளையிலே தோழர் கிருஸ்ணக்குட்டி அவர்கள் கூறிய மாக்ஸிச சிந்தனை ஒன்று எனக்கு நினைவுக்கு வருகின்றது.

'மக்கள் எல்லோரும் ஒரு பொருளை வாங்குகின்றார்கள். அந்தப் பொருளை உற்பத்தி செய்ய பல தொழிலாளர்களின் உழைப்பு அதில் அடங்கியுள்ளது. ஆனால் அந்தப் பலனை முதலாளி மட்டுமே எப்படி அனுபவிக்க முடியும்? அந்த பொருளை உருவாக்க கஷ்டப்பட்டு வேலைசெய்த தொழிலாளர்கள் மட்டும் எப்படி வறுமையில் வாட முடியும்?' என்பதுதான் அது. இந்த கேள்விக்குப் பதிலைத் தேட என்று சமூகம் முற்படுகிறதோ, அன்றுதான் இச் சமூகம் தூய்மையின் சமூகமாக மாறும். முதலாளித்துவ சக்திகளின் பின்னால் அவர்களுக்கு முட்டுக்குடுக்கும் இனவாத, மதவாத சக்திகளுக்குப்பின்னால் செல்லும்வரை தொழிலாள மக்களுக்கும் கூலி விவசாய மக்களுக்கும் என்றும் விடுதலையில்லை.'

இவரது செயற்திறனை சங்காரம் நாடகம் உருவான கதை என்ற நாட்டுக்கூத்தின் வடிவிலேயே தொழிலாள மக்களின் விடிவிற்காக போராடிய தலைவன் என்ற கதாபாத்திரத்தை தோழர் சி.மௌனகுரு அவர்கள் தோழர் கிருஸ்ணக்குட்டிக்கு வழங்கியிருந்தார்

அவர் மேலும் கூறுவது இனவாதிகளினால் தமிழ்த் துரோகியெனப் பார்க்கப்பட்டாலும் மட்டக்களப்பில் தொழிலாளர் கஷ்டப்பட்டோர் மத்தியில் அவருக்கு மதிப்பும் மரியாதையும் இருந்தது.

விவசாய மக்களின் பெரும் தேவையாக அன்று இருந்த பட்டிருப்புப் பாலத்தை நிர்மாணிக்க வேண்டிய கட்டாய தேவை ஏற்பட்ட சமயத்தில் தோழர் கிருஸ்ணக்குட்டி, தோழர் கிருஸ்ணபிள்ளை, தோழர் கதிர்காமத்தம்பி ஆகியோர் சகிதம் தோழர் S.A.விக்கிரமசிங்க அவர்களை பட்டிருப்பிற்கு அழைத்து வந்து, விவசாயிகள் படும் கஷ்டத்தினை அவ்விடத்தில் எடுத்துரைத்தது மாத்திரமல்ல அப்பிரதேசத்தின் அன்றைய பாராளுமன்ற உறுப்பினர் திரு.எதிர்மன சிங்கம் அவர்களினால் இப் பிரேரனை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து முன்மொழியப்படும் என்று அதனை தாங்களாகவே விளக்க உரையுடன் வழிமொழிய வேண்டும் என்று எடுத்துக் கூறினார்.

இதன் அடிப்படையில் பட்டிருப்புப் பாலம் கட்டுவதற்கு இவரும் மிக முக்கிய முன்னோடியாக இருந்தார் என்பதை நான் குறிப்பிட விரும்புகின்றேன்

கோட்டமுனை வைத்தியர் தோழர் அரிப் அவர்கள் தனது 80ஆவது பிறந்த நாள் அன்று "உங்கள் முன்னேற்றத்தின் படிகள்" என்ற 20 வாசகங்கள் அடங்கிய, தோழர் கிருஸ்ணக்குட்டியிடம் இருந்து பெற்ற அறிவுரைகளை உங்கள் முன்னேற்றத்தின் படிகள் என்று எழுதி அதனை தனது நண்பர்களுக்கும், தோழர்களுக்கும் வெளியிட்டிருந்தார்

சுறாவளி அடித்த சமயத்தில் தோழர் கிருஸ்ணக்குட்டி அவர்கள் காத்தான்குடி எல்லையில் மஞ்சந்தொடுவாயிலுள்ள முஸ்லீம் பிரதேசத்தில் இறந்து விட்டதாக கேள்விப்பட்டு நானும் தோழர் கதிர்காமத்தம்பி அவர்களும் மரங்களின் கட்டட இடிபாட்டுக்கு மத்தியிலும் சென்று பார்வையிட்ட சமயம் அவரை அவ்விடத்தில் புதைத்ததாக ஓர் இடத்தை காட்டினார் அங்கு வாழும் ஒருவர். அவ்விடத்தில் தான் கொண்டுவந்த பாலை தோழர் கதிர்காமத்தம்பி அவர்கள் ஊற்றி மௌனமாக இருவரும் இருக்க, இவ்வழியாக வந்த ஒருவர் இதில் இவரை புதைத்த இடமல்ல செத்த நாய் ஒன்றைத்தான் புதைத்து இருக்கிறோம் என்று கூறினார்

இதனை கேள்வியுற்று எனக்குப்பின்னால் இருந்த தோழர் கதிர்காமத்தம்பி அழுத போது அவரது கண்ணீர் எனது வலது கையில் விழுந்த போது நான் பின் நோக்கி அவரைப் பார்த்தேன். உடனே அவர் என்னை கட்டிப்பிடித்து அழுது, மீண்டும் 'யாருக்காக இந்த மனிதன் வாழ்ந்தான் என் விம்மி விம்மி அழுது கொண்டே கூறினார். 'சுயநலமின்றி சரித்திரம் படைத்த தலைவன் ஒருவனுக்கு இக்கதியா என நினைக்கும் போது என் நெஞ்சமே நெகிழ்கிறது' எனக் கூறினார்.

இந்தச் சரித்திர நாயகனின் உண்மைக் கதையை அறிந்தவர்கள் அவர் வாழ்ந்த காலத்தில் அவருடன் இருந்தால் அவர் செய்த சேவைகளை எனக்கு வழங்கும் பட்ஷத்தில் நான் அவரது வாழ்க்கை வரலாற்றை "யாருக்காக வாழ்ந்தான் என்னுயிர் தோழன்" என்ற புத்தக வடிவில் வெளியிட இருக்கின்றேன்

ஆகவே இதுபற்றி அறியத்தருபவர்கள் கீழே குறிப்பிட்ட பின்வரும் விலாசத்தில் என்னைத் தொடர்பு கொள்ளவும்.

தோழர் ந.சுந்தரேசன். P(W.I)
32/1, தாமரைக்கேணி வீதி
மட்டக்களப்பு
தொ.இல- 0772498123 / 0652222081
E-mail- east.lanka@yahoo.com

நம்பிக்கையுள்ளவனுக்கு
ரோஜா மட்டுமே தெரியும்
நம்பிக்கையற்றவனுக்கு
முட்கள் மட்டுமே தெரியும்

# மூதாதையரின் காலடிகள்

## மேன்காமம்

பாலசுகுமார் சேனையூர்
மேனாள் முதன்மையர்
கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக் கழகம்

கொட்டியாரத்தின் வரலாற்று மூலங்களின் சில கேள்விகளுக்கு பதில் சொல்லக் கூடிய, கொட்டியாரப் பற்றின் பழமையுறு கிராமங்களில், “மேன்காமம் வரலாற்று முடிச்சுகளை அவிழ்க்கக்கூடிய ஆதாரங்களை கொண்ட தமிழ் நிலம்.

கிளிவெட்டி கங்குவேலி நீலாப்பளை ஆகிய கிராமங்களின் நடுவே தனித் தமிழ்க் கிராமமாக தொன்மையான வரலாற்றோடு தமிழ் பண்பாட்டுத் தளத்தில் தன்னைத் தக்க வைத்துக் கொண்டுள்ள கிராமம்.

கோணேசர் கல்வெட்டின் வளமைகள் தொழும்புகள் இரண்டு கோயில்களுடன் மிக நெருக்கமான மரபுகளை பேசுகின்றன. தம்பலகாமம் கோணேசர், வெருகல் முருகன் கோயில் ஆகிய இந்த இரண்டு கோயில்களுடனும் கொட்டியாரத்து வன்னிபங்கள் தேச வழமை முறைகளுக்கு உட்பட்ட வகையில் உரிமைகளைச் கொண்டிருந்தமை வரலாற்று செய்திகளின் மூலம் அறிய முடிகிறது.

குளக்கோட்டன் வரலாற்றோடு அவன் வகுத்த நியமங்களோடு பன்னெடுங்காலம் கொடியாரப் பற்றின் பண்பாடு பயணித்தது என்பதற்கு ஒல்லாந்தர் கால குறிப்புகள் சான்று பகர்கின்றன.



திருகோணமலைக்கு பொறுப்பாக இருந்த ஒல்லாந்த தளபதி "வான்செண்டன் " கொட்டியாரத்தின் பல பகுதிகளுக்கும் பயணம் செய்த கதைகளை குறிப்புகளாக எழுதியிருக்கிறான் அப்படி அவன் எழுதிய குறிப்புகளில் மேன்காமத்தில் இருந்து கொட்டியாரப் பகுதியை நிர்வகித்த கொட்டியாரத்து வன்னிபத்தை சந்தித்ததாக எழுதியுள்ளான். கொட்டியார வன்னிபங்கள் மேன்காமத்தை சேர்ந்தவர்களாய் இருந்திருக்கிறார்கள் என்பது இதன்மூலம் நிருபணமாகிறது. அண்மையில் கண்டு பிடிக்கப்பட்ட உயில் ஒன்று மேன்காமத்தில் இருந்த இருமரபும் துய்ய வந்த பூபால வன்னிபம் எழுதிய புறா நோட்டு 1893ஆம் ஆண்டு எழுதப்பட்டதாய் சாட்சி பகர்கிறது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலம் வரை வன்னிபங்கள் நிர்வாகம் இருந்தமையையும் அவர்கள் செல்வாக்கையும் உறுதிப் படுத்துகின்றமை இங்கு குறிப்பிடத் தக்கது. வெருகல் கோயிலில் இருக்கும் பூபாலன் வன்னிபத்தின் பெயரைக் குறிப்பிடுவது ஒரு வன்னிபப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியை வழி மொழிகிறது என்றே சொல்லலாம்.

ஈழ நிலத்தின் தாய் நிலங்களில் ஒன்றாய் மேன்காமம் இருந்திருக்கிறது. தேங்கனி சோலைகள் சூழ்ந்த அழகிய கிராமம் கிராமத்துக்குள் நுழையும் பொழுதிலேயே மண்ணின் ஈரம் மணக்க கனியூறும் வாசனை நம்மை வரவேற்க வயல்கள் வளத்தை சொல்லி நிற்க விருந்தோம்பலும் விலை நிறை பண்பாடுமாய் நம் மனங்களை கொள்ளை கொள்ளும் கிராமம். மேன்காமத்தை என்னால் மறக்க முடியாது என் தோழன் கிருபை அவன் நினைவுகளுடன் கலந்து நிற்கும் அழகிய முது வரலாறு கொண்ட தமிழ்க் கிராமம்.

தொடர்ச்சி...

## ‘மின்னல் அதிகம் தாக்கலாம்’

ஆரம்பித்துள்ளது. இதேவேளை இவ்வருடம் (2018 )நவம்பர் 6 தொடக்கம் 11 வரையான காலப்பகுதியில் பெய்த கடும் மழை காரணமாக சுமார் 1,61632 குடும்பங்களைச் சேர்ந்த 57051 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இருந்தபோதும் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளும் இவ்வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டிருந்தன. மாவட்டத்திற்கு சராசரியாக கிடைக்கப்பெற வேண்டிய சராசரியான மழை வீழ்ச்சியில் 82 வீதம் கிடைக்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இருந்தபோதும் மாவட்டத்தில் அனர்த்த தயார்படுத்தல் செயற்பாடுகள் சீரான முறையில் நடைமுறைப் படுத்தப்பட்டிருந்தனால் வெள்ள அனர்த்தில் இருந்து மக்களை பாதுகாக்க முடிந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போதைய காலநிலையியல் அறிவுறுத்தலின்படி மின்னல்தாக்கம் அதிகமாக இடம்பெறக்கூடிய வாய்ப்புள்ளதனால் பொதுமக்கள் மிக அவதானத்துடன் செயற்படுமாறு சகல பிரதேச செயலாளர்களின் ஊடாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஊடாகவும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு வழங்கப்படுகின்றது.

குறிப்பாக கரையோர பிரதேசத்தில் உள்ள பொதுமக்கள், ஆற்றங்கரையை அண்டியுள்ளவர்கள் மற்றும் தாழ்நிலப் பிரதேசத்தில் உள்ளவர்கள் மழை அதிகமாக பெய்யும் சந்தர்ப்பங்களில் விழிப்பாக இருந்து செயற்படுவதுடன், குடும்ப அனர்த்த தயார்படுத்தல்களை முன்கூட்டியே செய்து கொள்ள வேண்டும்.

மின்னொழுக்குகள், மனித தவறுகள் காரணமாக தீ அபாயங்கள் ஏற்படுவது வழக்கமாகும். இதனால் தீ அபாயங்களிலிருந்து வீடுகள்,வியாபார ஸ்தலங்கள் மற்றும் திணைக்கள பாதுகாப்பு நடவடிக்கைகளையும் பொதுமக்கள் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.’

# உலகம் முழுவதும் நெருங்கிய உறவுகளால் கொல்லப்படும் பெண்கள்





ஒவ்வொருநாளும் சராசரியாக 137 பெண்கள் உலகம் முழுவதும் கொல்லப்படுகிறார்கள். அதுவும் நெருக்கமான குடும்ப உறுப்பினர்கள் மற்றும் தனது இணை மூலமாகவே கொல்லப்படுகிறார்கள் என ஐநாவின் போதை மற்றும் குற்றங்களுக்கான அலுவலகம் ஒரு புதிய தரவை வெளியிட்டிருக்கிறது.

"வீடுகளில்தான் பெண்கள் பெரும்பாலும் கொலை செய்யப்படுகிறார்கள். அவர்களின் வீடே அவர்களுக்கான அபாயகரமான இடமாக விளங்குகிறது" என இந்த அலுவலகம் கூறுகிறது.

2017ஆம் ஆண்டு கொல்லப்பட்ட 87 ஆயிரம் பெண்களில் பாதிக்கும் மேற்பட்டோர் அவர்களுக்கு நெருக்கமானவர்களின் கைகளாலேயே கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

தரவுகளை கவனமாக பார்த்தால் கிட்டத்தட்ட 30 ஆயிரம் பெண்கள் அவர்களின் நெருக்கமான இணையால் கொல்லப்பட்டிருக்கின்றனர். சுமார் 20 ஆயிரம் பெண்கள் அவர்களின் மற்ற உறவுகளால் கொல்லப்பட்டுள்ளனர். ஆண்கள் கொலை செய்யப்படும்வீதம் இன்னமும் அதிகம்

ஐநாவின் போதை மற்றும் குற்றங்களுக்கான அலுவலகம் சேகரித்துள்ள தரவுகளின் படி ''உள்நோக்கம் கொண்டு கொலை செய்யப்பட்டதால் வாழ்வை இழந்தவர்களில் பெண்களை விட நான்கு மடங்கு அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர் ஆண்கள்".

உலகம் முழுவதும் நடந்துள்ள மனிதர்களால் மனிதர்களே கொலை செய்யப்பட்ட நிகழ்வுகளில் பாதிக்கப்பட்டவர்களில் பத்தில் எட்டு பேர் ஆண்களே என ஐநாவின் இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. இருப்பினும், மனிதக்கொலைகளில் பாதிக்கப்படும் 10 பெண்களில் எட்டு பெண்கள் அவர்களின் நெருக்கமான உறவுகளால்தான் கொல்லப்படுகிறார்கள் எனவும் இந்த அறிக்கை விவரிக்கிறது.

"நெருங்கிய இணையின் வன்முறையால் பெண்கள் பாதிக்கப்படுவது மனிதக்கொலைகளில் பெண்கள் பாதிக்கப்படும் வீதத்தை மேலும் அதிகரித்துக்கொண்டே செல்கிறது" என இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஐநாவின் இப்புள்ளிவிவர அறிக்கையானது ஒவ்வொரு நாடுகளில் அரசுகளிடம் இருந்து பெற்ற மூலாதாரங்களை கொண்டே கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

புதிய ஐநாவின் அறிக்கையில், பெண்களுக்கெதிரான வன்முறைகள் மிகப்பெரிய அளவில் இன்னமும் அதிகாரிகளிடம் சரியாக தகவல் தெரிவிக்கப்படாமல் ஆவணப்படுத்தப்படாமல் இருக்கின்றன என விவரிக்கப்பட்டுள்ளது.

நன்றி: பிபிசி


Now Enrolling
NCL
NELSON COLLEGE LONDON
Are you 18+
CALL US
Business Course:
0208 514 0033
Hospitality Management:
0203 500 0239
Why Us
We provide:
• One to One support
• Flexible Timetable
• National and international course-based events & tours
• Employer introduction
• Job placement
Courses
• HND Business
• HND Hospitality Management
• BA (Hons) Top Up in Business
• BA (Hons) Top Up in Hospitality Management
Student Finance Available
udian Joseph
lob: 07759802175
ob: 07453641556


E-mail: info@hotelniruttha.com
Hotline: +94 717 412 292
NIRUTHA
UK Hotline: +447850927964
Email: info@hotelniruttha.com
Visit: www.hotelniruttha.com
Main Road, Kommathurai, Chenkalady, Sri Lanka.
Tel: +94652054444
Fax:+94652054092
அரங்கம் செய்திகளுக்கான ஆதரவில் கைகோர்ப்போம்' - ஹொட்டல் நிருத்தா

# மட்டு மாநகரசபை

## மூன்றாவது குழந்தைக்கு 5000 ரூபா



மாநகர சபை எல்லைக்குள் 01-01-2019க்கு பின்னர் பிறக்கின்ற ஒவ்வொரு குடும்பத்தின் 3ஆவது குழந்தைக்கும் மாதாந்தம் கொடுப்பனவாக 5000 ரூபா மாநகரசபையினால் வழங்கப்படவேண்டும் என்ற ஒரு திட்டத்தினை மாநகர முதல்வர் முன்வைத்துள்ளார்.

மட்டக்களப்பு மாநரசபை எல்லைப் பகுதியினுள் வாழ்கின்ற மக்களின் பிறப்பு வீதம் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது என்பதை கருத்திற்கொண்டு, பிறப்பு வீதத்தினை அதிகரிக்க வேண்டும் என்பதனால் மாநகர முதல்வர் அவர்களினால் இந்த யோசனை முன்வைக்கபட்டிருக்கின்றது.

முதல்வரின் இந்த யோசனையை நடைமுறைப்படுத்துவதாயின் இதனை சபைக்கூட்டத்தில் எதிர்வரும் 2019ஆம் ஆண்டிற்கான பாதீட்டில் சேர்த்துக்கொள்ள முடியும்.

இதற்கான நிதியினை மக்களின் வரி மூலமாகவோ அல்லது வேறு உதவி நிறுவனங்கள் மூலமாகவோ பெற்றுக்கொள்ள உத்தேசிக்கப்படுகின்றது.

அப்படி நடக்கின்ற போது மாநகர முதல்வரின் இத்திட்டம் செயல்வடிவம் பெற முடியும்.

இந்தத்திட்டத்தின் மூலம் மக்களின் வாழ்வாதாரம் உயர்வதுடன், மாநகர சபையின் செயற்திறனும் அதிகரிக்கும் வாய்ப்புள்ளதாக மாநகர பிரதி முதல்வர் க.சத்தியசீலன்

**லியோண்**

## நன்றி மற்றும் வேண்டுகோள்:





கல்லடிப்பாலத்திற்கு அண்மையில் அமைந்துள்ள மீன் இசைப் பூங்கா திருத்தப்பட்டு சிறுவர்கள் மீண்டும் விளையாடுவதற்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டுள்ளது.

இதனை செயற்படுத்திய மட்டு மாநகரசபை அதிகாரிகளுக்கும் ஊழியர்களுக்கும் நன்றியை மக்கள் சார்பில் தெரிவிக்கின்றோம்.

அத்துடன், ஒரு வேண்டு கோள்: கல்லடிக் கடற்கரை பெரும்பாலான சிறுவர்களும் விரும்பிச் செல்லுமிடமாக இருக்கின்றது. விசேடமாக விடுமுறை நாட்களில் சிறுவர்கள் பல வகையான விளையாட்டுக்களில் அங்கு ஈடுபடுகின்றனர். மட்டு மாநகரசபை இந்த இடங்களை சுத்தம் செய்து வருகின்ற போதிலும் அங்கு அமைக்க பெற்ற கொங்கிறீட் இருக்கைகள் சிதைந்து காணப்படுகின்றன. மேலும் அழகான மரப்பலகையால் ஆன நடைபாதை அமைக்கப்பட்டிருக்கின்ற போதிலும் அவை காலாவதியாகி உடைந்தும் துருப்பிடித்த ஆணிகள் வெளியில் தள்ளிக் கொண்டும் இருக்கின்றன. எனவே இதில் விளையாடும் சிறுவர்களுக்கு காயங்கள் ஏற்படுவதாக வரும் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

அவர்களின் வேண்டுகோள் இந்த உடைந்த கொங்கிறீட் இருக்கைளை சீர் செய்வேண்டும் அல்லது முற்றாக அகற்றவேண்டும் என்பதாகும். மரத்தாலான நடை பாதையை முடிந்தளவு சீர் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றனர்.

## குழந்தைகளுக்கான சத்துணவு வழங்கும் வேலைத்திட்டம்



மட்டு மாநகர சபை எல்லைக்குள் வசிக்கும் வறிய குடும்பங்களின் குழந்தைகளின் போசாக்கினை மேம்படுத்தும் வகையில் மாநகர சபையின் நிதி ஒதுக்கீட்டின் ஊடாக குழந்தைகளுக்கான சத்துணவு வழங்கும் வேலைத்திட்டம உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

இதில் அதிதிகளாக மாநகர பிரதி முதல்வர் கந்தசாமி சத்தியசீலன், மாநகர ஆணையாளர் கே .சித்திரவேல் , பிரதி ஆணையாளர் என் . தனஞ்சயன் மற்றும் பொதுச்சுகாதார தாதிய சகோதரி திருமதி





26-11-2018 அன்று மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி கிரிசுதன் தலைமையில் . ராஜவதி பயஸ் ஆனந்தராஜா, மாநகர சுகாதாரக் கிளைத் தலைவர் எஸ் . பத்மாவதி ஆகியோர் கலந்துகொண்டனர்.

## மாநகர சபையின் பாலர் பாடசாலைகள்

நல்லதொரு கல்விச் சமூகம் ஒன்றை உருவாக்குவதே மட்டு மாநகர சபையின் நோக்கம் என்கின்றார் பிரதி முதல்வர் க.சத்தியசீலன்.

மட்டு மாநகர சபை எல்லைக்குள், நகரை அண்டிய பகுதிகளில் பலதரப்பட்ட தனியார் பாலர் பாடசாலைகள் காணப்படுகின்றன.

ஆனால், மாநகர எல்லை பகுதிகளில் நாம் எமது கவனத்தை அதிகம் செலுத்த வேண்டியுள்ளது. ஆகவே அப்படியான மாநகர எல்லைப்பகுதிகளை இலக்கு வைத்தே தாம் கல்வி நடவடிக்கைகளுக்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம் என்றார் சத்தியசீலன்.

மாநகர சபையினால், மாநகர எல்லைப் பகுதிகளில் 4 பாலர் பாடசாலைகள் இயக்கப்படுகிறன. அதற்கான அனைத்து வசதிகளையும் நாம் கொடுத்து வருகின்றோம் என்றும் அவர் தெரிவித்தார்.

வறிய மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு பிரத்தியேக உதவிகளை வழங்கவும் தாம் முயற்சிகளை மேற்கொள்வதாகவும் சத்தியசீலன் தெரிவித்தார்.

**ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் உபதேசிய ஆளுகை திட்டத்தின் நன்கொடையின் ஊடாக இந்தப் பக்கத்துக்கான அனுசரணை வழங்கப்படுகின்றது**

# கலித்தொகை இன்பம்

## யாரந்தக் கடவுள்? ஏனிந்தப் பொய்?



காதல் மனைவியோடு இல்லறத்தில் இணைந்து ஒன்றாக வாழ்ந்திருந்த கணவன், ஒரு தடவை பரத்தையரை நாடிச்சென்று இன்ப சல்லாபத்தில் ஈடுபட்டான். அங்கேயே சிலநாட்கள் தங்கி இருந்துவிட்டு ஒருநாள், இரவுநேரத்தில் வீட்டுக்கு வருகிறான். இவ்வளவு நாட்களும் தான் எங்கு சென்றிருந்தேன் என்பதை மனைவி அறிந்திருப்பாளோ? அதுபற்றி கேட்டுவிடுவாளோ என்ற பயமும், குற்ற உணர்வும் அவனுக்கு எழுகிறது. அதனால், இத்தனை நாளும் கடவுளை வணங்குவதற்காகக் கோயிலுக்குச் சென்றிருந்ததாகப் பொய் சொல்கிறான்.

ஒருவர் ஒரு பொய்யைச் சொல்லும்போது பொருத்தமாகவும் சொல்ல வேண்டுமல்லவா? அத்துடன் பதற்றப்படாமலும் சொல்லவேண்டும். இல்லையென்றால் அவர் பொய்சொல்லுகின்றார் என்கின்ற உண்மை வெளிப்பட்டுவிடும். இங்கேயும் அப்படித்தான். அவனது நாக்கு வாய்க்குள்ளே தடம் புரள்கின்றது. பேச்சு நடுங்குகின்றது. தலையோ குனிந்தபடி இருக்கிறது. மனைவிக்கு அவன் சொல்வது பொய் என்பது தெரியும். ஏற்கனவே அவனைப்பற்றிய செய்தி வதந்தியாக அவளுக்கு எட்டியிருந்தது. எனவே, அவன் பரத்தையரிடம்தான் சென்று வந்திருக்கிறான் என்பதில் அவளுக்கு எள்ளளவும் சந்தேகமில்லை. அதனால், எந்தக் கோயிலுக்குச் சென்றாய், எந்தக் கடவுளை வணங்கினாய் என்றெல்லாம் குதர்க்கமாகக் கேட்டு அவனைக் குடைந்து எடுக்கிறாள். இவ்வாறு இருவரும் தர்க்கப்படுவது ஒரு நாடகக்காட்சியைப்போல அமைந்து, நம்மை இரசிக்க வைக்கின்றது.

கோயிலுக்குச் சென்று கடவுளைக் கண்டு அருள்வேண்டி வணங்கி வந்ததாக அவனும் திரும்பத் திரும்ப ஒரே பொய்யையே சொல்லிக்கொண்டிருக்கிறான். அவளால் தாங்க முடியவில்லை. அவனிடம் கேட்கிறாள், " கடவுளைக் காணச்சென்றேன், கடவுளைக் காணச் சென்றேன் என்கிறாயே, நீ எந்தக் கடவுளிடம் சென்று வந்தாய் என்று நான் சொல்லவா? என் வாயாலேயே அதைக் கேட்க நீ விரும்புகிறாயா? என்று கேட்டுவிட்டு, அவன் சென்று வந்த பரத்தையரின் தன்மைகளைப் பற்றிப் பட்டியலிடுகின்றாள்.

கண்டாலே மற்றவர்களை அழித்துவிடுகின்ற கண்களைக் கொண்ட அழகிய அந்தப் பரத்தைதான் நீ கண்ட கடவுளா? என்று ஏழனமாகக் கேட்டு அவனை ஏசாமல் ஏசுகின்றாள். இறுதியாக இங்கே பார். நீ இங்கிருந்து போய் விடு. நீ அவர்களை விட்டுப் பிரிந்திருந்தால் நீ சொல்லுகின்ற அந்தக் கடவுள்களெல்லாம் உன் பிரிவைத் தாங்கமுடியாமல் தவித்துப் போய்விடுவார்கள். நான் அப்படியில்லை. நான் தெளிவடைந்து விட்டேன். உன்னைப் பற்றி நன்றாக உணர்ந்துகொண்டேன். அதனால்,நான் உன்னை வெறுக்கிறேன். நீ போய் விடு. இப்போதே போய்விடு, என்று கணவனை விரட்டாமல் விரட்டுகின்றாள். அவனோ எதுவும் பேசமுடியாமல் திகைத்தப்போய், அவமானத்தால் கூனிக்குறுகி நிற்கிறான்.

இந்தக் காட்சியைப் புலப்படுத்தும் பாடல் வருமாறு:

வண்டூது சாந்தம் வடுக்கொள நீவிய
தண்டாத் தீம்சாயல் பரத்தை, வியல் மார்ப!
பண்டு, இன்னை யல்லைமன் ஈங்கு எல்லி
வந்தீயக் கண்டது எவன்? மற்று உரை
நன்றும் தடைஇய மென்தோளாய்!
கேட்டீவா யாயின் உடனுறை வாழ்க்கைக்கு
உதவிஉறையும் கடவுளர்கண் தங்கினேன்
சோலைமலர் வேய்ந்த மான்பிணை
யன்னார்பலர் நீ கடவுண்மை
கொண்டொழுகு வார் அவருள்
எக்கடவுள்? முற்றுஅக் கடவுளைச்
செப்பீமன் முத்தேர் முறுவலாய்! நாம்
மணம் புக்கக்கால் இப்போழ்து போழ்து
என்று அதுவாய்ப்பக்கூறிய அக்கடவுள்,
மற்று அக்கடவுள் - அது ஒக்கும் நாவுள்
அழுந்து தலைசாய்த்து நீகூறும் மாயமோ
கைப்படுக்கப் பட்டாய் நீ, கண்டாரை
வாயாக யாம்கூற வேட்டீவாய்! கேளினி
பெறல்நசை வேட்கையின் நின்குறி
வாய்ப்பப் பறிமுறை நேர்ந்த நகாராக,
கண்டார்க்கு இறுமுறை செய்யும்
உருவொடு நும்இல் செறிமுறை வந்த
கடவுளைக் கண்டாயோ?

நறும்தண் தகரமும் நானமும் நாறும்
நெறிந்த குரற்கூந்தல் நாளணிக்கு ஒப்ப
நோக்கிற் பிணிகொள்ளும் கண்ணொடு
மேனாள் நீ பூப்பலி விட்ட கடவுளைக்
கண்டாயோ?

ஈர்அணிக்கு ஏற்ற ஒடியாப் படிவத்துச்
சூர்கொன்ற செவ்வேலான் பாடிப்
பலநாளும் ஆராக் கனைகாமம் குன்றத்து
நின்னொடு மாரி இறுத்த கடவுளைக்
கண்டாயோ?

கண்ட கடவுளர் தம்முளும் நின்னை
வெறிகொள் வியன்மார்பு வேறாகச்
செய்து குறிகொளச் செய்தார் யார்?
செப்பு, மற்று யாரும் சிறுவரைத் தங்கின்
வெகுள்வர் செறுதக்காய்!

தேறினேன், சென்றீ, நீ செல்லா
விடுவாயேல் நற்றார் அகலத்துக்கு ஓர்சார
மேவிய நெட்டு இரும் கூந்தல் கடவுளர்
எல்லார்க்கும் முட்டுப்பாடு ஆகலும் உண்டு

(கலித்தொகை, மருதக்கலி பாடல் இல: 28 பாடியவர்: மருதன் இளநாகனார்)



இதன் நேரடிக்கருத்து:

கணவனும் மனைவியும் தர்க்கம் செய்வதுபோல இந்தப் பாடல் அமைந்துள்ளது.

மனைவி: கைகள் வலிக்கும் அளவுக்கு நறுமணம் வீசுகின்ற சாந்தினைப் பூசியிருப்பதால் வண்டுகள் வந்து மொய்த்துக்கொண்டிருப்பதும், இனிமையான பரத்தையர்கள் தழுவிமகிழ்ந்ததுமான அகன்ற மார்பை உடையவரே! முன்பெல்லாம் நீ இப்படி நடந்ததில்லையே! இப்போது இந்த இரவு நேரத்திலே வந்திருக்கிறாயே. எதைக்கண்டு கொண்டாய். அதைச் சொல்.

கணவன்: மிகவும் பருத்த அழகிய தோள்களை உடையவளே, நான் சொல்வதைக் கேட்பாயென்றால் கேள்! நாம் இருவரும் சேர்ந்து வாழுகின்ற நமது இல்வாழ்க்கைக்கு அருள்வேண்டி, கடவுள்கள் உறைந்துள்ள இடங்களில் சென்று தங்கி, வழிபாடியற்றி வந்தேன்.

மனைவி: சோலைகளிலே மலர்களைச் சூடிவருகின்ற பிணைமான்களைப் போன்ற பரத்தைப் பெண்கள்தான் நீ சொல்லும் கடவுள் தன்மையைக் கொண்டுள்ளவர்களோ? அவர்களிலே இப்போது நீ எந்தக் கடவுளைக் கண்டுவந்தாய் என்பதைச் சொல்வாயா?

கணவன்: முத்துப்போன்று அழகாகச் சிரிப்பவளே! நாம் திருமணம் செய்தபோது, "இந்த நேரமே நல்ல நேரம்" என்று அந்த நல்ல நேரம் நமக்கு வாய்க்கப் பெருவதற்கு அருளிய அந்தக் கடவுள்தான் நான் சென்றுவந்த கடவுள்.

மனைவி: அது பொருத்தமே! நாக்கு வாயினுள்ளே அழுந்திப் பேச்சு நடுங்கித் தலை கவிழ்ந்து நீ கூறுகின்ற மாயமா இது? கையும் களவுமாகப் பிடிபட்டாய் நீ. நீ கண்ட கடவுள்கள் யாரயாரென்று என்வாயாலே சொல்லி, நீ அதைக் கேட்க விரும்புகிறாயா? இனிக் கேள். பெற்று அனுபவிக்கும் விருப்பத்தினால், நீ குறித்துரைத்த இடத்திற்குத் தவறாமல் வந்த அந்தக் கடவுள் யார்? ஒழுங்காக முளைத்திருக்கும் பல்வரிசையைக் கொண்டவரும், காண்போருக்கு அழிவை உண்டாக்கும் அழகான உடலோடு பரத்தையரின் இல்லத்திலே உன்னைச் சேர்கின்ற தன்மைகொண்டு உன்னிடம் வந்தாளே அந்தக் கடவுளைத்தான் நீ கண்டுவந்தாயோ?

தமது அடர்ந்த கூந்தலில் தினமும் நறுமணம் மிக்க சாந்தமும், கஸ்தூரியும் பூசி வாசைன தந்து அணிசெய்வதற்குச் சமமாக, நீயும் நாள் தோறும் சென்று கூந்தலில் (பூச்சூடி) பூவால் அர்ச்சனை செய்வாயே கடவுள், தனது பார்வையாலேயே மற்றவரை நோய்க்குள்ளாக்கும் கண்களைக் கொண்ட கடவுள், அந்தக் கடவுளைத்தான் கண்டு வந்தாயா?

இரண்டு வகையான அழகிற்கும் ஏற்றவனாக விளங்கிய சூரபத்மனைக் கொன்ற சிவந்தவேலனைப்

சட்டத்தரணி, பாடும்மீன்
சு.ஸ்ரீகந்தராசா

பாடியதால், பலநாட்கள் தொடர்ந்து பெய்கின்ற மழையைப் போல, விடாது பொழிகின்ற காம வெள்ளத்தால் திருப்பரங்குன்றத்திலே மாரிக்காலம் முழுவதும் உன்னோடு களித்திருந்தாளே அந்தக் கடவுளைக் கண்டவந்தாயா?

நீ கண்டுவந்த கடவுள்களிலே, மணம்கமழுகின்ற உனது பரந்த மார்பிலே வெவ்வொறாக வகைப்படுத்தி அடையாளமிட்டவர்யார்? சொல். அவள் யாராயிருந்தாலும் நீ சற்றுநேரம் அவளைவிட்டு வேறிடத்திலே சென்று தங்கினால் கோபிப்பாள்.

வெறுக்கத்தக்கவனே! நான் எல்லாவற்றையும் தெளிவடைந்து கொண்டேன். நீ இப்போதே போய்விடு. நீ போகாமல் விட்டால், நல்ல மாலைகளை அணிந்த உனது மார்பிலே, ஒன்றுசேரத் தழுவிய, நீண்ட கரிய கூந்தலையுடைய அந்தக் கடவுள்கள் எல்லோருக்கும் தவிப்பு ஏற்பட்டுவிடும் அல்லவா?

## மட்டக்களப்பில் வீசிய மூன்றாவது சமய அலை

மூன்றாம் கட்டத்தில் மட்டக்களப்பில் ஏற்பட்ட சமய வழிபாட்டு மாற்றங்கள் மிக முக்கியமானவையாகும், இதனைப் புரிந்து கொள்ள நாம் தமிழ் நாட்டுச் சமய வரலாற்றை அறிய வேண்டும்.

தமிழ் நாட்டில் சமயம்

கி.பி.600க்கும் 1100க்குமிடையில் தமிழ் நாட்டின் சமயங்களிலும், வழிபாடுகளிலும் பெருமாற்றங்கள் ஏற்படுகின்றன. அதற்கான சமூகக் காரணிகள் உண்டு,அவற்றைப் பேச இது சமயம் அல்ல.

தமிழ் நாட்டில் கி.பி 600 களில் வைதீக மதங்கள் மீண்டும் மக்கள் மத்தியில் செல்வாக்குறுகின்றன. வைதீக மதங்கள் இப்போது சைவம், வைஸ்ணவம் எனப்பெயர் பெறுகின்றன. 700 , 800 , 900 களில் பக்தி இயக்கம் சமண பௌத்த சமயங்களை வெல்கின்றன, சைவமும் வைஸ்ணவமும் இரு பெரு மதங்களாக மேலுமுகின்றன. தேவார திவ்விய பிரபந்தங்கள் எழுகின்றன .சைவ வைஸ்ணவக் கோவில்கள் கட்டப்படுகின்றன. தெய்வ விக்கிரகங்கள் வார்க்கப்படுகின்றன.. பிராமணர்களும் ஐயங்கார்களும் இக்கோவில்களில் பூசகர்களானார்கள். பல்லவ மன்னன் மாமல்லன் வாதாபியை வெற்றி கொண்டபோது அங்கிருந்து பிள்ளையார் வணக்கத்தை தமிழ் நாடு கொணர்கிறான், பிராமணர்கள் முக்கியஸ்தர்களாக மதிக்கப்படுகிறார்கள், அவர்களே இக்கோவில்களின் பூசகர்களுமானார்கள். பூசை சமஸ்கிருதத்தில் செய்யப்பட்டது. சமஸ்கிருதம் தேவ பாசை என அழைக்கவும் பட்டது. பல்லவர்கள் காலத்தில் பல்லவ மன்னர்களும் வணிகர்களும் இந்தச் சைவ மதத்தைக் கடல் கடந்து பரப்பினர். 10 ஆம் நூற்றாண்டில் சோழராட்சியில் சிவ வணக்கம் மேலும் வளர்ந்தது. 11 ஆம் நூற்றாண்டில் சைவ சித்தாந்தம் உருவானது. சோழர் காலத்தில் பொலநறுவையில் பல சிவாலயங்களும் அவர்களின் ஆட்சிக்குட்பட்ட இடங்களில் சிவாலயங்களும் சமஸ்கிருத வழிபாடுகளும் அறிமுகமாயின. அரசரும் பிரபுக்களும் சமூகத்தின் மேல் நிலையிலிருந்தவர்களும் இப்புதிய பண்பாட்டால் கவரப்பட்டனர். அதில் இணைந்தனர், சைவ மதம் அரசமதமானது, இதன் தாக்கம் குறிப்பாக இலங்கையிலும் சிறப்பாக மட்டக்களப்பிலும் தெரியலாயிற்று சிவனையும் திருமாலையும் பெரும் கடவுளர்களாக்கிய போது அவர்களைப்பாட அவர்களின் செயல்கள் குணாதிசயங்கள் பற்றிய தகவல்கள் தேவைப்பட்டன, இத்தகவல்களை அன்று வடமொழியிலிருந்த புராண இதிகாசக் கதைகள் தந்து உதவின.

வியப்பிலாழ்த்தும் மட்டக்களப்பு ஆகமம் சாரா தெய்வ வழிபாட்டுமுறைகளும் சடங்குகளும்

--- பேராசிரியர் சி. மௌனகுரு ---

# ஆரியத் தெய்வங்களும், பிராமணீய வருகையும், அவை கொணர்ந்த வழிபாட்டு முறைகளும், வழிபாட்டு மொழியும்

## (இது பிற்காலம் 12 ஆம் நூற்றாண்டின் பின்)

தமிழர் மத்தியில் முதலாவது பெரும் பண்பாட்டுத்தாக்கம் பெருமளவில் ஏற்படுகிறது. அதுவே வடமொழி புராண இதிகாசக் கதைகளின் தாக்கமாகும்

வடநாட்டுத் தெய்வங்கள் பல தமிழ் நாட்டை இடம் கொண்டன. வைதீக மதங்கள் சைவம் வைஸ்ணவமாக தமிழ் நாட்டுள் புகுந்து, தமிழ் நாட்டில் ஏற்கனவே இருந்த உள் நாட்டுத் தெய்வங்களை தம்முடன் இணைத்துக்கொண்டன என்பர் சிலர்.



இங்கு வந்து சேர்ந்த வடநாட்டுத் தெய்வங்களைத் தமிழ் நாட்டு வழிபாடுகள் தம்வயப்படுத்திக்கொண்டன என்பர் சிலர், எனினும் சிறு சமய நெறிகள் பெரு சமய நெறிகளுக்குள் உள்வாங்கப்பட்டன என்பதே யதார்த்தம்.

சங்ககாலத்திலேயே வேலனை சக்தியின் மகனாகப்பார்க்கும் மரபு இருந்தது. திருமுருகாற்றுப் படையில் வேலனும் முருகனும் சுப்பிரமணியனும் இணையும் பாங்கைக்காணலாம், அது ஓர் சமய இணைப்பு மாத்திரமல்ல, ஓர் கலாசார இணைப்புமாகும். முருகன் வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை சிறுவன் என அழைக்கப்பட்டு காளியின் மகனாகின்றான். ஆரியப்பண்பாடு காளியை சிவனின் மனைவியான சக்தி ஆக்கிவிடுகிறது, இதனால் முருகன் சிவனதும் பார்வதியினதும் மகனாக்கப்பட்டுவிடுகிறான், இதற்கு புராண ஆதாரங்கள் கூறப்படுகின்றன.

வினாயகர் புராணம் பிள்ளையாரையும் சிவன் -பார்வதி குழந்தையாக்கி விடுகிறது. தமிழ் கடவுளர்கள் ஆரிய மயமான கதை அது.

சோழர்கள் பொலநறுவையை ஆண்டபோது இவ்வணக்க முறைகளும் பிராமணீயச் செல்வாக்கும் மட்டக்களப்பிலும் பரவியிருக்க வாய்ப்புண்டு.

இந்தப் பெரும் தெய்வங்களுடன் முன்னரேயே இங்கிருந்த சிறுதெய்வங்கள் இணைக்கப்பட்டன.

மட்டக்களப்பில் நடந்தேறிய சமய இணைப்பு

மட்டக்களப்பிலிருந்த பழைய தெய்வங்களான குமார, மாறா போன்ற தெய்வங்கள் முருகனுடன் சம்பந்தப்படுத்தப்பட்டன. காளி, மாரி, கண்ணகி, கடனாச்சியம்மன் போன்ற பெண் தெய்வங்கள் சக்தியுடன் தொடர்புபடுத்தப்பட்டன.

நரசிங்கம், சிங்கனாதம் போன்ற தெய்வங்கள் விஷ்ணுவுடன் தொடர்புபடுத்தப்பட்டன.

வீரபத்திரன், சுடலை வைரவன், ஐயனார் போன்ற தெய்வங்கள் சிவனுடன் தொடர்புபடுத்தப்பட்டன.

“பெரும் தெய்வங்கள் இவற்றைத் தம்முடனிணைத்துக் கொள்வதற்குப் பதிலாக சிறு தெய்வங்கள் பெரும் தெய்வ வணக்கத்தைத் தம்மளவில் உள்வாங்கிக் கொண்டன” என்று கூறுவோரும் உண்டு.

இங்கிருந்த சிறு தெய்வ வழிபாடுகளினதும், சமூக அமைப்பினதும் செல்வாக்குமே இதற்குக் காரணங்களாகும்.

இதனாலேதான் யாழ்ப்பாணத்தில் ஆறுமுக நாவலர் உருவாக்கிய சைவ ஒழுக்க நெறிகள் யாழ்ப்பாணத்தில் அதே இறுக்கத்துடன் இங்கு நிலைபெற முடியவில்லை.

பலிகொடுத்தல், மடைவைத்தல் கும்பம் வைத்தல் உருவேறி ஆடல் அனைவரும் இணைதல் பகிர்ந்துண்ணல் என்ற பண்பாடுகளோடு வளர்ந்த ஒரு பல் கலசார சமூகத்தில் மிக இறுக்கமான ஆசாரசீலம்,, "தினம் விரதம்,.மரக்கறி உணவு, சமய ஒழுக்க நெறிகள், சமயக் கட்டுப்பாடுகள்” என்ற கடும் போக்குகள் செல்வாக்குப்பெற வாய்ப்பிருக்கவிலை.




தம்மிடையே இருந்த பழைய சமய சுதந்திரத்தையே மக்கள் விரும்பினர் போலும். சில இடங்களில் கும்பம், அட்சரத்தகடு என்பனவற்றிற்றுக்குப் பதிலாக வெண்கலக்கடவுள் விக்கிரகங்களை வைக்க முன் வந்தபோது மானிட உடலில் புகுந்து இருந்த காளி, மாரி தெய்வங்கள் அவற்றை வைக்க வேண்டாம் என்று கூறிய கதைகளும் இங்குண்டு. எனினும் என்ன மூன்றாவதாக வந்த இந்த ஆரிய அல்லது சமஸ்கிருத அலை மட்டக்களப்பின் பல பகுதிகளைத் தன்னுள் ஈர்த்துக்கொண்டது.

சிங்களப் பகுதியில் சிங்கள மக்கள் மத்தியில் தொன்றுதொட்டு இருந்த கிராமியச் சமயங்களை வெல்லாது, பௌத்தம் அவற்றினோடு சமரசம் செய்து கொண்டது என்பார் பேராசிரியர் சரச் சந்திரா. இங்கும் அதேதான் நடந்தது. முழுக்க முழுக்க அந்நிய மதமான ஒரு மதம் சமரசம் செய்து கொள்ள முடியுமானால் பல தொடர்புகளையுடைய இந்து மதம் மட்டக்களப்பிற் கிராமியச் சமயங்களுடன் சமரசம் செய்ததில் வியப்பில்லை.

இச் சமய சமரசம் அமைதியாக நடந்தேறியது. சமரசத்தில் பண்டைய வழிபாட்டு முறைகள் சில இடங்களில் வலு இழந்தன. ஆகமம் சார் கோவில்களில் வழிபாட்டு மொழியும் சமஸ்கிருதமாகியது. புரியாத மொழி வழிபாட்டையும் மக்கள் ஏற்றுகொண்டனர். எனினும் தம் பழமையை மட்டக்களப்பு மக்கள் தொடர்ந்தும் பேணினர்

(தொடரும்)

# அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 13

## தரம் 11 - தமிழ்மொழியும் இலக்கியமும்

- மட்டுநகர் யுவன் -

### முற்பகுதிக்கு மிகப் பொருத்தமான முடிக்கும் பகுதி

01. அலையலையாய் மக்கள் கூட்டம்
(1) திரண்டனர் (2) திரண்டது (3) திரண்டார் (4) திரண்டன

02. நிருவாக சபைக் கூட்டத்தில் மன்றப் பொருளாளரினால்
(1) கணக்கறிக்கை சமர்ப்பித்தார். (3) கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்பட்டன.
(2) கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. (4) கணக்கறிக்கையைச் சமர்ப்பித்தது

03. நீர் இலங்கைக்கு வந்திருக்கிறீர் என நான் அறிந்திருந்தால்,
(1) உடனே வருகிறேன். (3) உடனே வந்திருந்தேன்.
(2) உடனே வருவேன் (4) உடனே வந்திருப்பேன்.

04. அந்த மரத்திலுள்ள ஒவ்வொரு
(1) பூவும் நல்லது. (3) பூக்களும் நல்லவை.
(2) பூவும் நல்லவை. (4) பூக்களும் நல்லது.

05. அரசன் எவ்வாறு செல்கிறானோ குடிகளும்
(1) அங்ஙனமே செல்வர். (3) அவ்வழியே செல்வர்.
(2) அவ்வாறே செல்வர். (4) அவ்வண்ணமே செல்வர்.

06. ஒவ்வொரு
(1) வாக்கியமும் ஒவ்வோர் உண்மையைக் கூறுகின்றது.
(2) வாக்கியமும் ஒவ்வோர் உண்மைகளைக் கூறுகின்றன.
(3) வாக்கியங்களும் ஒவ்வோர் உண்மைகளைக் கூறுகின்றன.
(4) வாக்கியங்களும் ஒவ்வோர் உண்மைகளைக் கூறுகின்றது.

07. அந்த மன்றத்தின் பொதுச்சபை மேன்முறையீடு செய்வதென்று
(1) முடிவெடுத்தனர். (3) முடிவெடுத்தார்கள்.
(2) முடிவெடுத்தது. (4) முடிவை எடுத்தன.

08. விடாமுயற்சி செய்தால் வாழ்க்கையில் முன்னேற்றம்
(1) காண்பார்கள். (2) காணமுடியும். (3) காணமுடியாது. (4) கண்டார்கள்.

09. சிறுகதைகள் யாவும் வாசகர்களால் ஒவ்வொன்றாக நன்கு
(1) வாசித்துப்பார்க்கப்பட்டது. (3) வாசித்துப்பார்க்கப்பட்டன.
(2) வாசித்துப்பார்த்தார்கள் (4) வாசித்துப்பார்க்கப்படுகிறது

10. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காகப் பொருள்கள் சேர்க்கும் பணியில் பாடசாலைகளும் வலயக் கல்வி அலுவலகமும் இணைந்து
(1) ஈடுபடுகிறார்கள். (3) ஈடுபடுகின்றன.
(2) ஈடுபடுகிறது. (4) ஈடுபட்டுவருகிறார்கள்.

11. மனிதனுக்குப் பணிவு, அன்பு, ஊக்கம் முதலான உயர்குணங்கள்
(1) அவசியமானதாகும் (3) அவசரமானதாகும்
(2) அவசரமானவையாகும் (4) அவசியமானவையாகும்.

12. வாழ்க்கையில் முன்னேறுவதற்கு அறிவு, ஆற்றல் என்பவற்றோடு விடாமுயற்சியும்
(1) இன்றியமையாததாகக் கருதப்படுகின்றன.
(2) இன்றியமையாதனவாகக் கருதப்படுகின்றது.
(3) இன்றியமையாததாகக் கருதப்படுகின்றது.
(4) இன்றியமையாதனவாகக் கருதப்படுகின்றன.

13. மக்களோடு சேர்ந்து கௌரவ மாநகர சபை உறுப்பினரும் சிரமதானத்தில்
(1) ஈடுபட்டனர். (2) ஈடுபட்டார்கள். (3) ஈடுபட்டார். (4) ஈடுபடுவர்.

14. உலகிலுள்ள தொழில்கள் ஒவ்வொன்றும் தனித்துவமானதும் அத்தியாவசியமானதுமாகக்
(1) காணப்படுகின்றது. (3) காணப்படுகின்றன.
(2) காணப்படுவதாகும் (4) கொள்ளப்பட வேண்டியது.

15. அவர்களும் நாங்களும் வெள்ள நிவாரணத்துக்காகப் பொருள்களையும் பணத்தையும்
(1) சேகரித்தன. (2) சேர்த்தார்கள். (3) சேர்த்தார். (4) சேகரித்தோம்

ஒவ்வொரு வினாவுக்கும் சரியான விடையை எழுதி அனுப்பும் முதல் மூன்று வெற்றியாளர்களுக்குப் பரிசில் வழங்கப்படும். முடிவுத் திகதி : 06.12.2018.

அனுப்பவேண்டிய முகவரி : ஆசிரியர், அரங்கம், 227, பார் வீதி, மட்டக்களப்பு

# கற்போம்

## எழுத்து -விடை

**எழுத்து** என்ற தலைப்பில் கேட்கப்பட்ட வினாக்களுக்குரிய விடை

| | | |
|---|---|---|
| 1. (1) | 6. (2) | 11. (2) |
| 2. (3) | 7. (4) | 12. (3) |
| 3. (4) | 8. (1) | 13. (4) |
| 4. (1) | 9. (4) | 14. (3) |
| 5. (3) | 10. (1) | 15. (1) |

## பொது அறிவு (இலங்கை)

என்.தனஞ்சேயன்

**இலங்கையில் வழங்கப்படும் விருதுகள்**

| | |
|---|---|
| இலங்கையில் ஔடதகொள்கையைஅறிமுகப்படுத்தியவர்: | சேனக்கபிபில |
| இலங்கை ஸ்ரீலங்கா என மீள் பெயரிடப்பட்டது | : 1972 |
| இலங்கையின் முதலாவது பொது குடிசன மதிப்பு | : 1871 |
| இலங்கையின் 15 வது சனத்தொகை கணிப்பீடு | : 2021 இல் நடைபெறும் |
| இலங்கையில் கட்டாயக் கல்வி வயது | : 6-16 |
| இலங்கை பொதுச்சட்டப்படி திருமணத்துக்குரிய குறைந்த வயது | : 18 |
| ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடும் குறைத்தபட்ச வயது | : 35 |
| பாடசாலைக் கல்வி அமைச்சு உருவாக்கம் | : 2001 |
| சிகிரியாவை கட்டிய மன்னன் | : காசியப்பன் |

## மாணவர்களின் ஆய்வுக்கான இலவசப் பயிற்சி

க.பொ.த உயர்தரம் மற்றும் பல்கலைக்கழக படிப்புக்களில் ஈடுபட்டுள்ள மற்றும் அவற்றை முடித்துள்ள மாணவர்கள் மத்தியில் ஆய்வுகள் குறித்த முனைப்புக்களை ஊக்குவிக்கும் நோக்கில் எமது அரங்கம் செய்திகள் பத்திரிகை பயிற்சித்திட்டம் ஒன்றினை அமுல்படுத்த உத்தேசித்துள்ளது.

இதன்படி, திறமையுள்ள மற்றும் ஆர்வமுள்ள மாணவர்கள் சிலர் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆய்வுகளை மேற்கொள்வதற்கான படிமுறைகள் குறித்த ஆரம்பக் கட்ட பயிற்சிகளை அரங்கம் நிறுவனம் வழங்கும். அப்பயிற்சியின் முடிவில், கள ஆய்வுகளை, குறிப்பாக பொருளாதார வளம் குறித்த நேரடி ஆய்வுகளை வழங்குவதற்கான திட்டம் ஒன்றை மேற்கொள்கின்றோம்.

இதில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு பயிற்சிக்காலத்தில் செலவுகளுக்கான கொடுப்பனவுகளும் வழங்க திட்டமிட்டுள்ளோம். ஆரம்பக் கட்டப் பயிற்சிகளை மட்டு நகரில் உள்ள அரங்கம் அலுவலகத்திலும், அதனை அடுத்த களப்பயிற்சிகளை மட்டக்களப்பு மாவட்டத்தின் கிராமங்கள் சிலவற்றிலும் நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளோம்.

அவர்களால் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளின் முடிவுகள் குறிப்பிட்ட கிராமங்களில் வளர்ச்சிப் பணிகளில் ஈடுபடுபவர்கள் மற்றும் அங்கு முதலீடு செய்ய விரும்புபவர்களுக்கு வழங்கப்படும்.

இதன் மூலம் அந்தக் கிராமமும் அதன் மக்களும் பலனடைய வாய்ப்பேற்படும் என்று நம்புகிறோம்.

ஆகவே ஒரு புறம் எமது மாணவர்கள் மத்தியில் ஆய்வுகள் குறித்த அறிவை வளர்த்தல் மற்றும் கிராமங்களின் வளர்ச்சிக்கு உதவுதல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இப்பயிற்சித்திட்டம் 6 மாதங்களுக்கானது. விருப்பமுள்ள மாணவர்கள் பத்திரிகையின் இன்னுமொரு பக்கத்தில் இருக்கும் விளம்பரத்தை பார்த்து அதில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சலுக்கு விண்ணப்பிக்கவும்.

(ஆசிரியர்)

## பக்க அனுசரணை

NCL
NELSON COLLEGE LONDON
IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

# விளையாட்டு

## 1990 களில் பிரகாசித்த ராஜா எனும் கால்பந்தாட்ட வீரன்

மட்டக்களப்பின் கால்பந்தாட்டத்தில் 1990 களில் பிரகாசித்த வீரர்களுள் ஒருவர் பாடுமீன் பொழுது போக்குக் கழகத்தின் பின்கள வீரராக ஆடிய ராஜா அவர்களாவார். மட்டக்களப்பு கல்லடி முகத்துவாரத்தில் வாழ்ந்த ராஜா அவர்கள் உள்ளூர் செவண சைட் போட்டிகளில் கல்லடி கடல் மீன் கழகத்திற்காக விளையாடியவர். அந்நாட்களில் கடல் மீன் அணி கால்பந்தாட்டச் சங்கத்தில் பதிவுசெய்யப்படாத காரணத்தினால் அணிக்கு பதினொருவர் ஆடும் போட்டிகளில் இவர் பாடுமீன் கழகத்திற்காகப் பங்குபற்றியிருந்தார். ராஜா அவர்கள் தனது கால்பந்தாட்டத்தின் ஆரம்ப நாட்களில் சிவானந்தா கழகத்தில் ஆடியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ராஜா அவர்களின் உடல் பருமனாக இருந்தாலும் அவர் மிகவும் சிறந்த பின்கள வீரராக பாடுமீன் கழகத்தின் போட்டிகளில் பங்குபற்றியிருந்தார். 1991 ஆம் ஆண்டு மட்டுநகரில் நடைபெற்ற சுதந்திர தினக் கிண்ணத்திற்கான மாபெரும் கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் காத்தான்குடி சன்றைஸ் கழகமும் பாடுமீன் கழகமும் இறுதிப் போட்டியில் பங்குபற்றியிருந்தன. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டியில் சன்றைஸ் அணி கடைசி நிமிடங்களில் கோல் போட்டு வெற்றி பெற்றிருந்தது. இப்போட்டியின் பரிசளிப்பு விழாவில் சிறந்த வீரருக்கான விருது ராஜா அவர்களுக்குக் கிடைத்திருந்தது.

உண்மையிலேயே குறித்த போட்டியில் எதிரணி இரசிகர்களாலும் பாராட்டப் பெற்ற சிறந்த வீரராக ராஜா அவர்கள் தனது அபாரமான ஆட்டத்தினை வெளிப்படுத்தியிருந்தார்.

ராஜா அவர்களின் "அலாக்காக அந்தரத்தில் பாய்ந்து பந்தை உதைக்கும் ஆற்றல்" கால்பந்தாட்ட இரசிகர்களால் மிகவும் விரும்பிப் பார்க்கப்படும் காட்சியாக அமைந்திருக்கும்.

போட்டி ஆரம்பிக்கும் முன்பதாக வீரர்கள் தம்மைத் தயார்படுத்தும் வேளையில் ராஜா அவர்கள் கோல் கம்பங்களில் தனது உடலை மோதித் தனது தயார்ப்படுத்தலை ஒரு மல்யுத்த வீரரைப் போல மேற்கொள்வதனையும் பார்க்க முடியும்.

இவ்வாறு ஒரு மல்யுத்த வீரனைப் போல

**து.கௌரீஸ்வரன்**

திரு ராஜா அவர்கள் பயிற்சிகளை மேற்கொள்வதானது எதிரணி வீரர்களிடையே இவர் குறித்த ஒரு பீதியை ஏற்படுத்தும் தந்திரோபாயமாகவும் இவரால் செய்யப்படுவதாக இரசிகர்கள் கூறியதுண்டு. இந்தத் தந்திரோபாயம் இவருக்கு உதவியுள்ளதையும் போட்டிகளின் போது காணக் கூடியதாக இருந்தது. அதாவது ராஜாவை பல முன்கள வீரர்கள் நெருங்காத வகையில் பந்துப் பரிமாற்றத்தினை மேற்கொள்ளும் நிலைமைகள் காணப்பட்டன.

இவ்வாறு மட்டுநகரின் கால்பந்தாட்டத்தில் 1990 களில் பிரகாசித்த ராஜா அவர்களை மட்டுநகரின் கால்பந்து இரசிகர்கள் இலகுவில் மறக்க மாட்டார்கள்.

## கிண்ணியாவில் ரேஞ்சர்ஸ் வி.கழகம் கழக புதிய மேலங்கி அறிமுகம்.



திருமலை கிண்ணியா பெரியாற்றுமுனை ரேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் புதிய நிருவாகத்தெரிவும் புதிய மேலங்கி அறிமுகமும் கிண்ணியா நகரசபை உறுப்பினர் மொகமட் றிஸ்வான் இல்லத்தில் நடைபெற்றது. அதன்போது நிருவாகசபைத் தெரிவும் புதிய அங்கி அறிமுகமும் நடைபெற்றது.

(காரைதீவு சகா)

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்

Koddamunai Sports Club
Batticaloa

## பெரியநீலாவணை பாலர்பாடசாலை விளையாட்டுநிகழ்வு!



பெரியநீலாவணை சரஸ்வதி பாலர் பாடசாலை மாணவர்களுக்கான விளையாட்டுப்போட்டியும், பரிசளிப்பு நிகழ்வும் சிறப்பாக நடைபெற்றன.

இந் நிகழ்வு கடந்தசெவ்வாய்க்கிழமை பெரியநீலாவணை பொது மைதானத்தில் ஆசிரியை திருமதி தாரணி ரவிதரன் தலைமையில் இடம்பெற்றது.

மாணவர்களின் விளையாட்டுப்போட்டிகளுடன், வினோத உடைப்போட்டிகளும் பலரையும் கவரும் வகையில் அமைந்திருந்தன.

இந் நிகழ்வுக்கு அதிதிகளாக உதவிக்கல்விப்பணிப்பாளர் எம்.ஏ.எம். றசீன், கிராம சேவை உத்தியோகத்தர் எஸ்.சுந்தர் ராஜன், வெளிக்கள உத்தியோகத்தர் ஐ.எல்.எம்.அனிஸ், ஓய்வுபெற்ற கோட்டக்கல்விப்பணிப்பாளர் பி.ஜெகநாதன் மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் கலந்து சிறப்பித்தனர்.

## அம்பாறையில் ஆளுநர் கடற்கரைக் கரப்பந்தாட்டப் போட்டி ஆரம்பம்!




(காரைதீவு நிருபர் சகா)

அம்பாறை மாவட்டத்திற்கான ஆளுநர் ரோஹிதபோகல்லாகம வெற்றிக்கிண்ணத்திற்கான கடற்கரை கரப்பந்தாட்டப்போட்டி நேற்று(29) வியாழக்கிழமை ஆரம்பமாகவிருந்தது.

அட்டாளைச்சேனை கடற்கரையில் ஆரம்பமான இப் போட்டி இன்று(30) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு பரிசளிப்பு நிகழ்வுடன் நிறைவடையும்.

கிழக்கு மாகாண கல்வி விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் முத்துபண்டா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வின் அங்குரார்ப்பண இறுதி வைபவங்களுக்கு பிரதம அதிதியாக முறையே சுகாதார அமைச்சின் செயலாளர் எ.எச். எம்.அன்சாரும் முதலமைச்சரின் செயலாளர் யு.எல்.எ.அசீஸும் பிரதம அதிதிகளாகக்கலந்து கொள்வார்கள்.

கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களம் இப்போட்டியை ஏற்பாடு செய்து அழைப்புவிடுத்துள்ளதாக திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் என்.எம்.நௌபீஸ் தெரிவித்தார். இதற்கு சுற்றுலாத்துறை பேரவை அனுசரணை வழங்குகின்றது.

## பன்சேனை பாரி வித்தியாலயம் வெற்றிவாகை!

(காரைதீவு சகா)

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட அம்பிளாந்துறை கலைமகள் மகா வித்தியாலய வீராங்கனைகளுக்கும் பன்சேனை பாரி வித்தியாலய வீராங்கனைகளுக்கும் இடையிலான உதைபந்தாட்ட மாபெரும் சமரில் (விக் மச்) பன்சேனை பாரி

**காரைதீவு சகா**

வித்தியாலயம் வெற்றிவாகைசூடியது.

அம்பிளாந்துறை கலைமகள் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில், கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற குறித்த போட்டியிலேயே 1 - 0 என்ற கோல் வித்தியாசத்தில் இவ்வருடத்திற்கான மாபெரும் சமரில் பன்சேனை பாரி வித்தியாலயம் வென்றது.

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் முதன்முறையாக கடந்த வருடமே பெண்களுக்கான உதைபந்தாட்ட மாபெரும் சமர் பன்சேனை பாரி வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் இரண்டாவது மாபெரும் சமர் ஞாயிறன்று நடைபெற்றது. இதன்போது, போட்டியில் பங்கேற்ற இரு அணி வீரர்களுக்கும் பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கிவைக்கப்பட்டன. மேலும் அணிக்கான வெற்றிக்கிண்ணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்படும் பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில், குறித்த இரு அணியினரும் தேசியமட்டப் போட்டியில் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வித்தியாலய அதிபர் சு.தேவராஜன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமார், வலயக்கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம், பிரதேசசபை தவிசாளர் சி.புஸ்பலிங்கம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

# மதுபாவனையில் உளநலம்

## மதுபாவனை கட்டுப்பாடு தொடர்பான இலங்கையின் தேசியக் கொள்கை -5

விசேட தினங்களிலும், பூரணை நாட்களிலும் இலங்கையில் மது விற்பனை நிலையங்கள் மூடப்படுகின்றன. இந்நாட்களை புனிதமாகவும், அமைதியாகவும், சந்தோசமாகவும் அனுஷ்டிக்க வேண்டும் என்பதே அரசாங்கத்தினதும், சமய பெரியவர்களினதும், குடும்பங்களினதும் எதிர்பார்ப்பு. மறுதலையாக இத்தினங்களிற்கு முன்னைய நாட்களில் மதுபான நிலையங்களிற்கு முன் நீண்ட 'கியூ' வரிசை காணப்படுவது கண்கூடு. சில வேளைகளில் கையிருப்பும் முடிந்தும்விடும். அத்துடன் குறித்த விலைக்கு பன்மடங்கு அதிக விலை கொடுத்தும் கொடுத்த பணத்தின் மீதியின்றியும் வாடிக்கையாளர் திரும்புவதாக குறிப்பிடுகின்றனர். அத்துடன் வேலியோர விற்பனை (வீட்டில்)



இந்நாட்களில் அதிகமாக இருப்பதை கிராமங்களில் காணலாம். இதனை கட்டுப்படுத்த வேண்டி காவல்துறை, நீதித்துறை மதுவரி திணைக்களம் தகுந்த நடவடிக்கைகளை இன்னும் எடுக்க வேண்டும்.

எமது பெரும்பான்மை சிங்கள சமூகமும், தமிழர்களும் கொண்டாடுகின்ற சித்திரை பெருநாட்களில், மதுபாவனையால் ஏற்படுகின்ற வன்முறை, வீதி விபத்துக்கள் ஏனைய விபத்துக்களுடன் மருத்துவமனைகளின் அவசர, தீவிர சிகிச்சை பிரிவுகளில் அனுமதிக்கப்படும் காயப்படுவோரின் எண்ணிக்கை மிக அதிகம், இவர்களில் அனேகமானவர்கள் மதுபாவனைக்கு பின்னரே மேற்படி சம்பவங்களால் அனுமதிக்கப்படுகின்றனர்.

இலங்கையில் அரச வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்படுகின்ற 40வீதத்துக்கும் மேலான வன்முறை சார்ந்த குற்றச்செயல்களில், 50 வீதத்திற்கு அதிகமான கொலை குற்றங்களில், அதே அளவு வீதி விபத்துக்களில் மதுபாவனை சம்பந்தப்பட்டுள்ளதாக அறியப்பட்டுள்ளது. விசேட நாட்களில் மதுபான விற்பனை நிலையங்களை மூடுவது மட்டுமல்ல அன்றைய நாளில் நுகர்வோரின் நுகர்வையும் எதிர்காலத்தில் கட்டுப்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான செயற்பாடுகள் தேவை.

### மதுபாவனை ஏற்படுத்தும் உடல் நலப் பிரச்சினைகள்

உச்சந்தலை முதல், உள்ளங்கால் வரை உள்ள அனைத்து தொகுதிகளிலும், அதன் உறுப்புகளிலும் நாட்பட்ட பாதிப்புகளை மதுபாவனை ஏற்படுத்துகிறது. குறிப்பாக உள்ளெடுக்கப்படுகின்ற வாய்க்குழி, அகத்துறிஞ்சல் நடைபெறுகின்ற இரைப்பை, சிறுகுடல், பெருங்குடல், உட்பட்ட சமிபாட்டு தொகுதியில் உள்ள முக்கிய சுரப்பிகளான ஈரல், சதையி என்பவற்றில் இதன் பாதிப்புக்கள் மிக அதிகம்.

இரத்தவாந்தி, வயிற்றோட்டம், குடற்புண், ஈரல் அழற்சி, ஈரல் கருகல் நோய், குறையூட்டம், விற்றமின் குறைபாடு, சதையி அழற்சி என்பன ஏற்படுகின்றன.

### இரத்தவாந்தி (Blood Stained Vomitus)

சமிபாட்டுத் தொகுதியில் அடங்குகின்ற வாய்குழி, குரல்வளை, களம், இரைப்பை, சிறுகுடல் பகுதிகளில் அதிக மதுபாவனையால் மயிர்துளை குழாய்களின் பாதிப்பு உடனடியாக இரத்தவாந்தியாக மாறும். அவசர மருத்துவ உதவி இல்லாமல் புறக்கணிக்கும் போது இதுவே உயிரிழப்பாகவும் மாறும்.

### குறையூட்டம்

மிகக்கூடுதலாக மதுபாவிக்கின்ற ஒருவரில் அவர் உட்கொண்ட மதுவில் உள்ள உயர் கலோரிப் பெறுமானத்தால் உடல் தனது சக்தியை பெற்றுக்கொண்டதாக எடுத்துக் கொள்ளும். எனவே மதுபாவிக்கின்ற ஒருவரில் பசியோ, உணவுத் தேவையோ அல்லது அதற்கான முன்னுரிமையோ கொடுக்கப்படுவதில்லை. காலப்போக்கில் மதுபாவித்தவர் புரத / கலோரி குறையூட்டம், உடல் மெலிவு, விற்றமின் குறைபாடு போன்றவற்றால் பாதிக்கப்படுவார். அத்துடன் மதுவின் இரசாயன செயற்பாட்டால் உட்கொள்ளும் உணவின் சமிபாடு, அகத்துறிஞ்சல் என்பனவும் பாதிக்கப்படும்.

டாக்டர். பி. யூடி ரமேஸ் ஜெயக்குமார்
உளநல மருத்துவர்
வாழைச்சேனை மருத்துவமனை

### குடற்புண்கள்

இரைப்பை, சிறுகுடல் பகுதிகளில் 'எதனோல்' குடற்புண்களை ஏற்படுத்தும். மதுவிற்கு அடிமைப்பட்டவர்கள் தங்களது உடல்நிலை குறித்து அதிகம் அக்கறைபடாததாலும், மருத்துவ உதவியை உடன் நாடாததாலும் இவை மிகப்பெரிய பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. சில வேளைகளில் குடற்பகுதிகளில் உட்புற குருதிப்பெருக்கு மரணத்திலும் முடிவதுண்டு.

### இரைப்பை புற்றுநோய்

குடற்புன் ஏற்பட்ட இடங்களிலும், ஏனைய இரைப்பை பகுதிகளிலும் புற்றுநோய் ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் மிக அதிகம்.

### ஈரலில் கொழும்பு சேமிப்பு

'எதனோலின்' ஈரல் நஞ்சு நிலை, குறையூட்டம் என்பவற்றால் உடலின் ஏனைய உறுப்புகளில் சேமிக்கப்பட்ட கொழுப்பு அங்கிருந்து அகற்றப்பட்டு படிப்படியாக ஈரலில் சேமிக்கப்படும். மிதமான, அதிக குடி இதனை ஏற்படுத்தும். அத்துடன் இதற்கு நீண்ட நாட்கள் குடிக்க வேண்டும் என்றும் இல்லை. குறுகிய காலப்பகுதியிலேயே ஈரல் பாதிப்புக்கள் ஏற்படும்.

# கருவிலேயே மரபணுத்திருத்தம் செய்து சிக்கலில் மாட்டிய சீன விஞ்ஞானி



சீன விஞ்ஞானி ஒருவர் உலகிலேயே முதல் முறையாக மரபணுத் திருத்தம் (ஜீன் எடிட்டிங்) செய்யப்பட்ட குழந்தைகள் பிறப்பதற்கு தான் உதவியதாகக் கூறியது குறித்து பல சந்தேகங்கள் எழுந்துள்ளன. இவ்வாறு செய்யப்படுவது சாத்தியமா என்றும் ஆய்வாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

ஜீன் எடிட்டிங் என்பதை சுருக்கமாக கருத்தரித்த முட்டையின் மரபணுக்களில் சில மாற்றங்களை செய்யும் முறை என குறிப்பிடலாம்.

சீன விஞ்ஞானியான ஹி ஜியான்குய், சில வாரங்களுக்கு முன்பு பிறந்த பெண் இரட்டையர்களுக்கு எச்.ஐ.வி தொற்று ஏற்படாமல் இருப்பதற்காக கருதரித்த முட்டையில் மரபணு மாற்றம் செய்யப்பட்டதாக தெரிவித்தார்.

அவரது செய்முறையின் காணொளி ஏ.பி நிறுவனத்தால் படம் பிடிக்கப்பட்டது. அவரது ஆய்வு சரிபார்க்கப்படவில்லை. மேலும் அது விஞ்ஞானிகள் மத்தியில் ஆத்திரத்தை ஏற்படுத்தியது. அவர்கள் இதனை மனிதத்தன்மையற்ற ஒரு பயங்கரமான செயல் என விவரித்துள்ளனர்.

இது போன்ற செயல்களில் ஈடுபடுவது பல்வேறு நாடுகளிலும் தடை செய்யப்பட்டுள்ளது.

எதிர்கால தலைமுறை

ஜீன் எடிட்டிங் என சொல்லப்படும் மரபணுவில் சில மாற்றங்களைச் செய்யும் முறையால் அதாவது, கருத்தரித்த முட்டையில் உள்ள நிரல் மொழிக் குறியீடுகளில் மரபு ரீதியாக வரக்கூடிய சில நோய்களை தடுக்க உரிய மாற்றங்களைச் செய்வதன் மூலம் நல்ல பலன் கிடைக்க வாய்ப்பிருக்கிறது.

ஆனால் கருத்தரித்த முட்டையின் மரபணுவில் குறுக்கீடு செய்வது சம்பந்தப்பட்ட நபரை மட்டுமல்ல எதிர்கால தலைமுறையையும் பாதிக்கக்கூடும் என சில நிபுணர்கள் கவலைப்படுகிறார்கள்.

பிரிட்டன் உள்பட பல்வேறு நாடுகளில் குழந்தைகளை உருவாக்கப் பயன்படும் கருத்தரித்த முட்டையில் ஜீன் எடிட்டிங் செய்வதை தடுப்பதற்கான சட்டங்களை வைத்திருக்கிறார்கள்.

ஆய்வாளர்கள் குழந்தை உருவாக்க பயன்படுத்தாத ஐ.வி.எப் (IVF) எனும் செயற்கை கருத்தரித்தல் முறையில் உருவாக்கப்படும் கரு முட்டைகளில் மட்டுமே ஜீன் எடிட்டிங் ஆராய்ச்சியை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் ஆராய்ச்சிக்கு பயன்படுத்தப்பட்ட அந்த கரு முட்டைகள் உடனடியாக அழிக்கப்படவேண்டும்.

ஆனால் அமெரிக்காவின் ஸ்டான்ஃபோர்டு பல்கலைகழகத்தில் பயின்றவரும் தென் சீன நகரமான ஷென்ஜென்னில் ஆய்வுக்கூடத்தில் வேலைசெய்து வரும் பேராசிரியர் ஹி, "லுலு மற்றும்

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# கிரீன் டீ குடிப்பதன் மூலம் உடல்நலன் மேம்படுமா?

பிரபலங்களின் ஊட்டச்சத்து நிபுணரான ருஜுதா திவேகர் இது குறித்து பேசும்போது," கிரீன் டீ என்பது நிச்சயம் பலனளிக்கக்கூடியது. ஆனால் யாருக்கு என கேட்டால் அதனை விற்பனை செய்பவர்களுக்கே," என்பேன் என்கிறார்.



கிரீன் டீ என்பது பலனளிக்கும். ஆனால் முறையான அளவு மட்டுமே உட்கொள்ள வேண்டும். அதிகம் குடிப்பது உங்களது உடல்நலனை பாதிக்கக்கூடும்.

கிரீன் டீயில் கஃபீன் இருக்கிறது. இதனால் தலைவலி, தூக்கம் வருவதில் சிக்கல், வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு போன்றவை ஏற்படலாம். ரத்த அழுத்த பிரச்னை இருக்கக்கூடிய நோயாளிகளும் கிரீன் டீ குடிப்பதில் கவனமாக இருக்கவேண்டும்.

கிரீன் டீயின் டேனின் இருக்கிறது. இது இரும்புச்சத்தை உடல் கிரகிப்பதில் பாதிப்புகளை ஏற்படுத்தும். ஆனால் அளவாக எடுத்துக்கொண்டால் பிரச்னை இல்லை.

கிரீன் டீ குடிப்பதால் ஒருமுகப்படுத்தும் திறன் அதிகரிக்கும் என பல்வேறு ஆய்வுகள் கூறுகின்றன. ஆகவே கிரீன் டீ குடிக்க விரும்பினால் எவ்வளவு உட்கொள்கிறீர்கள் என்பதில் கவனம் செலுத்துங்கள்.

நன்றி பிபிசி

தொடர்ச்சி...

## லஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு சுமார் 3000 முறைப்பாடுகள்

ஊழல் குறித்து 1286 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன. சட்டவிரோதமாக சொத்துச் சேர்த்தது குறித்து 88 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

தொடர்ச்சி...

## தேசிகர் வீதியின் அவலம் பாரீர்!

வசிப்போர் மற்றும் பயணிகள் பலத்த விசனத்தைத் தெரிவிக்கின்றனர்.

பெரும்பாலான வாகனசாரதிகள் பயணிகள் இப்பாதையை தவிர்க்கின்ற அதேவேளை அவ்வீதியில் வாழும் மக்கள் தவிர்க்கமுடியாதவர்களாகவுள்ளனர்.

இதுதொடர்பில் காரைதீவு பிரதேசசெயலாளர் வே.ஜெகதீசன் பிரதேசசபைத்தவிசாளர் கி.ஜெயசிறில் ஆகியோரிடம் கேட்டபோது இவ்வீதி கட்டாயம் திருத்தப்படவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை. ஐ திட்டத்திற்குள் இவ்வீதி உள்வாங்கப்பட்டதாகக்கூறப்படுகிறது. பொறுத்திருந்து பார்ப்போம்.

இல்லாவிடில் வேறேதாவது திட்டத்திற்குள் உள்வாங்கி புனரமைக்கப்படவேண்டும் என்றனர்.

தொடர்ச்சி...

## இலங்கையின் "கதாநாயகர்கள்"

ஒருவரான சிறில் மெத்தியூவின் இனவாத பரப்புரைக்கு எதிராக "இந்தப் பொய் பிரச்சாரங்களுக்கு சபாநாயகர் அனுமதிக்கக் கூடாது" என்று அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் குறுக்கிட்டார். ஆனால் பாக்கீர் மாக்கார் (ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்) அவரைப் பேசவிடாது மெத்தியூவை இனவாதம் காக்க அனுமதித்தார் என்கிற குற்றச்சாட்டு அன்று எழுந்திருந்தது.

சுதந்தரத்திற்குப் பின்னரான இலங்கையின் பாராளுமன்ற வரலாற்றில் இன்று வரை தமிழர் எவரும் சபாநாயகராக தெரிவானது கிடையாது. சுதந்திரத்திற்கு முன்னர் அரசாங்க சபையில் 1936-1947 வரையான காலப்பகுதியில் வைத்திலிங்கம் துரைசுவாமி சபாநாயகராக பதவி வகித்திருந்தார்.

பாராளுமன்றத்தில் குறைந்த அளவில் பேசி, நிறைய கடமைகளை நிறைவேற்றுபவர் சபாநாயகர். இலங்கையின் முதலாவது பிரஜையாக ஜனாதிபதி அழைக்கப்படுகிறார். இரண்டாவது பிரஜையாக பிரதமர் அழைக்கப்படுகிறார். மூன்றாவது பிரஜையாக அழைக்கப்படுபவர் பாராளுமன்ற சபாநாயகர். இலங்கையின் அரசியலமைப்பின்படி ஜனாதிபதி பதவி இழக்கும், துறக்கும் காலப்பகுதியில் அடுத்த ஜனாதிபதி தெரிவாகும் வரை சபாநாயகரே ஜனாதிபதியாக இருப்பார்.

சபாநாயகர்களை "கதாநாயகர்களாக" கௌரவித்து ஒழுகும் பாராளுமன்ற சம்பிரதாயம் எப்போது முடிவுக்கு வருகிறதோ அன்று பாராளுமன்ற ஜனநாயகத்தின் ஜனநாயகத்துக்கு சரிவு தான் எஞ்சும்.

தொடர்ச்சி...

## எதிரணி ஊடக மாநாட்டின்போது மின்சாரம் இடைநிறுத்தம்

எதிரணியினர் 21பேர் சேர்ந்து ஊடக மாநாட்டை நடாத்தத்தீர்மானித்தனர்.

ஊடக மாநாட்டிற்கு இடைஞ்சல்!
சுமார் 5.40மணியளவில் அதே சபா மண்டபத்தில் எதிரணியினர் 21உறுப்பினர்களும் இணைந்து ஊடக மாநாட்டை நடாத்தத்தொடங்கினர்.

சாய்ந்தமருதைச்சேர்ந்த தோடம்பழச்சின்ன சுயேச்சை அணியினர் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு உறுப்பினர்கள் அகிலஇலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர்கள் குதிரைச்சின்ன சுயேச்சை மற்றும் கொடிஉறுப்பினரென 21பேர் ஊடகமாநாட்டில் பங்கேற்றனர்.

ஊடக மாநாடு தொடங்கி சில நிமிடங்களில் அம்மண்டபத்திற்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டது. மின்விசிறிகளும் நிறுத்தப்பட்டன. எனினும் செல்போன் லைற் வெளிச்சத்துடன் ஊடக மாநாட்டைத் தொடர்ந்தனர்.

சற்றுநேரத்தில் மேயர் றக்கீப் பொலிசாரை வரவழைத்து எதிரணியினரை மண்டபத்தைவிட்டு வெளியேற்றுமாறு உத்தரவிட்டார்.

பொலிசார் மண்டபத்தினுள் நுழையமுற்பட்டதும் எதிரணியினர் உரத்துக் குரலெழுப்பினர். ஆதலால் பொலிசார் வெளியே நிற்கநேரிட்டது. எனினும் மேயர் விடவில்லை. பொலிசாருடன் மேயர் மண்டபத்தினுள் நுழைந்து வெளியேற்ற உத்தரவிட்டார். ஆனால் பொலிசார் அமைதியாக நின்றதனால் அவர்களை வெளியேற்றமுடியவில்லை.

இந்நிலை தொடர்ந்தால் எதிர்காலத்தில் சபை நடாத்தமுடியாத நிலை தோன்றலாம் கூடவே கைகலப்பும் உயிரிழப்பும் இடம்பெறலாமென அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சி...

## கருவிலேயே மரபணுத்திருத்தம் செய்து சிக்கலில் மாட்டிய சீன விஞ்ஞானி

நானா" என அழைக்கப்படும் இரட்டையர் பெண் குழந்தைகள் பிறப்பதற்கு ஜீன் எடிட்டிங் கருவிகளை பயன்படுத்தியதாக கூறுகிறார். ஒரு காணொளியில், அந்தப் பெண் குழந்தைகளுக்கு எச்ஐவி வைரஸ் தாக்கினாலும் அதனை எதிர்கொள்ளும் விதமாக சிசிஆர்5 எனும் மரபணுவை நீக்கியதாகவும், அப்பெண்களுக்கு இனி எச்.ஐ.வி தொற்றாது எனவும் தெரிவித்தார். தன்னுடைய வேலை என்பது அதிக அறிவுத் திறன் கொண்டிருக்கும் அல்லது வெவ்வேறு கண் நிறம் கொண்ட குழந்தைகளை உருவாக்குவதைவிட நோய்களால் பாதிக்கப்படாத வண்ணம் குழந்தைகளை உருவாக்குவதே என்கிறார் அவர்.

''என்னுடைய இவ்வேலை சர்சைக்குரியதாகலாம் என நான் அறிவேன். ஆனால் இனி இந்த தொழில்நுட்பம் குடும்பங்களுக்கு தேவை என நம்புகிறேன், அதனால் அவர்களுக்காக இவ்விமர்சனங்களை ஏற்றுக்கொள்ள விழைகிறேன்" என அந்தக் காணொளியில் கூறினார்.

இருப்பினும், இந்தக் கூற்றில் சம்பந்தப்பட்டுள்ள மருத்துவமனை உட்பட பல்வேறு நிறுவனங்களும் தங்களுக்கு இதில் எந்த சம்பந்தமும் இல்லை என மறுத்துள்ளனர்.

ஷென்ஜென்னில் உள்ள சதர்ன் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைகழகம் இந்த ஆராய்ச்சி திட்டம் குறித்து தெரியவில்லை என்றும் விசாரணையை துவக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

அவர் ஜீன் எடிட்டிங் செய்ததாக வெளிவந்துள்ள செய்திகள் உண்மையெனில் பேராசிரியர் ஹி எந்தவித நியாயப்படுத்தலுமின்றி ஆரோக்கியமான கரு முட்டைகளில் சோதனை செய்தது மிகவும் பொறுப்பற்ற செயல் என மற்ற விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

லண்டனின் கிங்ஸ் கல்லூரியின் ஸ்டெம் செல் அறிவியலின் வல்லுநரான டாக்டர் டஸ்க்கோ லிக், '' இதை அறநெறிக்குட்பட்டது எனச் சொன்னால், அறநெறி குறித்த பார்வை உலகின் மற்ற பகுதிகளில் மிகவும் வேறுபடக்கூடும்," என்கிறார். எச்.ஐ.வி என்பது நிச்சயம் சிகிச்சையளிக்கக்கூடியது; மேலும் இந்த தொற்றானது மருந்து மாத்திரைகள் மூலம் கட்டுக்குள் வைத்திருந்தால் பெற்றோர்கள் மூலம் குழந்தைகளுக்கு பரவும் வாய்ப்பு கிட்டத்தட்ட அறவே இல்லை என அவர் வாதிடுகிறார்.

குழந்தைகளுக்கு ஜீன் எடிட்டிங் செய்யப்படுவது ஒருநாள் நியாயமானதாகப்படலாம். ஆனால் அதற்கு முன்னர் அவ்வாறு பரிசோதனைகளை செய்வதற்கு போதிய சோதனைகளையும் தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

# அன்னை ஸ்ரீ பேச்சியம்மன் ஆலய
# 12 ஆம் மாத தினப்பூசை விபரம் -2018

பதுளை வீதி புலையவெளி செங்கலடி



| | | |
|---|---|---|
| 03/12/2018 | திங்கட்கிழமை | ஏகதசி விரதம் |
| 04/12/2018 | செய்வாய்க்கிழமை | பிரதோஷ விரதம் |
| 13/12/2018 | வியாழக்கிழமை | விநாயகர் சஷ்டி விரதம் |
| 14/12/2018 | வெள்ளிக்கிழமை | திருவெம்பாவை பூசை |
| 20/12/2018 | வியாழக்கிழமை | பிரதோஷ விரதம் |
| 22/12/2018 | சனிக்கிழமை | பூரணை விரதம் |
| 25/12/2018 | செவ்வாய்க்கிழமை | சங்கடகர சதுர்த்தி |

எமது ஆலயத்தில் உபயங்களைச் செய்ய விரும்புவோம் எம்மை தொடர்புகொள்ளலாம். தொலைபேசி - 0771516203

(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)

# அரங்கத்தினால் இலவச பயிற்சிப்பட்டறை

வயதெல்லை:- 18 - 25

தகைமை- க.பொ.த உயர்தரம்

க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றி பெறுபேறுகளுக்காகவும் பல்கலைக்கழக அனுமதிக்காக காத்திருப்போரும் வரவேற்கப்படுகின்றனர்.

**20 பேருக்கான வாய்ப்புக்கள் உள்ளன..**

வளவாளர்:- ஆனந்தாஜோசப்(லண்டன்)

பயிற்சிக்கால அடிப்படை கொடுப்பனவுகள் வழங்கப்படும்..

ஜனவரியில் பயிற்சிகள் ஆரம்பமாகும்.

**காலம் – 6 மாதம்**

- Communication skill,
- Business skill,
- Research skill,
- Marketing skill,
- Project writing skill

டிசம்பர் 10ஆம் திகதிக்கு முன்பதாக தங்கள் சுயவிபரக்கோவையை ; அரங்கம், இல.227 பார் வீதி, மட்டக்களப்பு எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

Printed at Express News Papers (Cey) Ltd and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa